# மதுரமுரளி

Registered as Newspaper in India R. No. 62828 / 95

| Regd. No. TN / PMG (CCR) / 521 / 03 - 05 | Licensed to Post without prepayment WPP No. 319 |
|---|---|

| வேணு : 8 | மார்ச் - 2003 | கானம் : 8 |
|---|---|---|






சென்னை, மேற்கு மாம்பலம் அயோத்யா அஸ்வமேத மஹாமண்டபத்தில்
ஸ்ரீ ஸ்வாமிஜியின் உபன்யாசம்


Published by V. Sankaran on behalf of Guruji Sri Muralidhara Swamigal Mission, New No.2, Old No. 24, Netaji Nagar, Jafferkhanpet, Chennai - 600 083 and Printed by Mrs. Sri. Kalaivani of Sri Maruthy Laser Printers, 200 (173), Peters Road, Chennai - 600 014. ✆ : 28522656 / 28524256. Editor : S. Sridhar.

Website : www.madhuramurali.org ; e-mail : contact@madhuramurali.org


ஸ்ரீ ஹரி:

ஸ்ரீ ஸ்ரீ முரளீதர ஸ்வாமிஜியின்

# மதுரமுரளி

தெய்வீக மாதப் பத்திரிகை




| வேணு : 8 | மார்ச் - 2003 | கானம் : 8 |
|---|---|---|

www.madhuramurali.org

ஸ்ரீ ஹரி:



ஸந்த் ஏகநாதஸ்வாமி
அன்னதான கூடம்
திறப்பு விழாவின்பொழுது
ஸ்ரீ ஸ்ரீ ஸ்வாமிஜியுடன்
ஸ்ரீ தீனதயாளன் -
ஸ்ரீமதி விஜயகுமாரி தீனதயாளன்
தம்பதியினர்
24.01.2003



ஸ்ரீ கல்யாணஸ்ரீநிவாஸபெருமாள்
வார்ஷிக
ப்ரதிஷ்டாதினத்தன்று
ஸந்த் ஏகநாதஸ்வாமி
அன்னதான கூடத்தில்
ஸ்ரீ ஸ்வாமிஜியின்
அருளுரை
06.02.2003



ஸ்ரீ ஹரி:

# ஸ்ரீ ஸ்ரீ ஸ்வாமிஜியின் நிகழ்ச்சி விபரம்

28.2.2003 முதல்
4.3.2003 வரை
இரவு : 6.30 – 8.30
"மஹாபக்த விஜயம்" உபன்யாஸம்
இடம் : ஸ்ரீ மதனகோபாலஸ்வாமி கோவில்,
மேலமாசி வீதி, மதுரை – 625 001.

5.3.2003
இரவு : 7.00 – 8.00
"ஸ்ரீ ராமகிருஷ்ணரின் வாழ்வும், வாக்கும்" உபன்யாஸம்
இடம் : ஸ்ரீ ராமகிருஷ்ணா மிஷன் ஆஸ்ரமம்,
17, ராமகிருஷ்ணா ரோடு, சேலம் – 636 007.

7.3.2003
மாலை : 5.00
"ராம நாம ப்ரபாவம்" உபன்யாஸம்
இடம் : பிளாட் 9, 1வது சாலை,
வெங்கடேஸ்வரா நகர், கொட்டிவாக்கம்,
சென்னை – 600 041.

8.3.2003
இரவு : 6.00 – 8.00
ஸ்ரீ ஸ்வாமிஜியின் அருளுரை
இடம் : சைதன்ய மஹாப்ரபு நாமசிக்ஷா கேந்திரா,
13. பட்டேல் தெரு, குரோம்பேட்டை, சென்னை.

9.3.2003 முதல்
18.3.2003 வரை
சென்னை பிரேமிக பவனத்தில்
காலை : 9.00–11.00 : ஸ்ரீ ரங்க சதகம் கீர்த்தனைகள் பாடப்படும்
இரவு : 7.00 – 9.00 : "திருமாலை" உபன்யாஸம்

23.3.2003 முதல்
29.3.2003 வரை
ஸ்ரீ ஸ்வாமிஜி ஸ்ரீவனத்தில்
தங்கியிருப்பார்கள்

6.4.2003 முதல்
10.4.2003 வரை
இரவு : 7.00 – 9.00
'மஹா பக்தவிஜயம்' உபன்யாஸம்
இடம் : ஸ்ரீ வெங்கடேஸ்வர பக்த ஸமாஜம்
ஆனந்த நிலையம், 81/124, பட்டேல் ரோடு,
பெரம்பூர், சென்னை – 600 011.

6.4.2003 ஸ்ரீ ஆதிசங்கரர்
7.4.2003 பத்ராசல ஸ்ரீ ராமதாஸர்
8.4.2003 ஸ்ரீ ஜயதேவர்
9.4.2003 ஸ்ரீ தியாகராஜ ஸ்வாமிகள்
10.4.2003 ஆண்டாள் கல்யாணம்

சுபம்

| இடம் | ஸ்ரீ ஸ்வாமிஜியின் தரிசன நேரம் |
|---|---|
| மதுராபுரி ஆஸ்ரமம் | காலை 9.00 – 11.00 மணி வரை<br>மாலை 4.00 – 6.00 மணி வரை |
| பிரேமிக பவனம் சென்னை | காலை 8.00 – 10.00 மணி வரை<br>மாலை 5.30 – 8.30 மணி வரை |

ஸ்ரீ ஹரி:

# ஸ்ரீ ஸ்ரீ முரளீதர ஸ்வாமிஜியின்

# மதுரமுரளி

(தெய்வீக மாதப் பத்திரிகை)

வேணு : 8 மார்ச் 2003 கானம் : 8

## விஷய ஸூசிகை


| | | பக்கம் |
|---|---|---|
| 1. | ஸ்ரீ ஸ்வாமிஜியின் கீர்த்தனம் | 2 |
| 2. | மதுரமான மஹனீயர் - 88 | 3 |
| 3. | பக்தர்களின் கேள்விகளுக்கு ஸ்ரீ ஸ்வாமிஜியின் பதில்கள் | 5 |
| 4. | என் இனிய மனதிற்கு | 7 |
| 5. | ஸனாதனப் புதிர் - பகுதி - 23 | 16 |
| 6. | வேத கதைகள் - 69 | 16d |
| 7. | எந்தரோ மஹானுபாவுலு - 59 | 18 |
| 8. | பாலகர்களுக்கு ஒரு கதை - 63 | 20 |
| 9. | மாலே மணிவண்ணா - 6 | 23 |
| 10. | ப்ருந்தாவனமும், நந்தகுமாரனும் - 14 (தொடர்ச்சி) | 25 |
| 11. | ஸ்ரீ ஸ்வாமிஜியின் ஸம்பாஷணைகளிலிருந்து - 90 | 27 |
| 12. | செய்திகள் | 30 |
| 13. | பக்தர்களின் கவனத்திற்கு ! | 31 |


ஐயன் அங்கு அது கேட்டு, 'அறன் அல்லவும்
எய்தினால், ''அது செய்க!'' என்று ஏவினால்,
மெய்ய! நின் உரை வேதம் எனக் கொடு
செய்கை அன்றோ! அறம் செயும் ஆறு' என்றான்

- கம்ப ராமாயணம், பாலகாண்டம், தாடகை வதைப்படலம் - 383

''தாடகையை வதம் செய்!'' என்று கூறிய விஸ்வாமித்ரரிடம், ஸ்ரீ ராமன், ''அறம் அல்லாத ஒரு செயலைச் செய்ய நேர்ந்தாலும், 'அதை செய்க!' என்று நீங்கள் எனக்கு கட்டளையிட்டால், அந்த கட்டளையை வேதவாக்காகக் கொண்டு செய்வதே எனக்குரிய அறம்!'' என்று கூறினார்.

ஸ்ரீ ஹரி:

# ஸ்ரீ ஸ்வாமிஜியின் கீர்த்தனம்

ராகம் : ஶுத்த தன்யாஸி | தாளம் : ஆதி

பல்லவி

மஹாயோக பீட நிலய பாண்டுரங்க!
யோக க்ஷேமம் பாலய பாண்டுரங்க!

சரணங்கள்

ஸாதுஜனஸேவித பாண்டுரங்க!
ஸதா கீர்த்தனப்ரிய பாண்டுரங்க!
சந்த்ரபாகாதீரவாஸ பாண்டுரங்க!
ஶீதளசரண பாண்டுரங்க! (மஹாயோக)

ஸுந்தரவதன பாண்டுரங்க!
சம்பகநாஸிக பாண்டுரங்க!
ஶங்கசக்ரதர பாண்டுரங்க!
ஸுந்தராதர பாண்டுரங்க! (மஹாயோக)

பங்கஜலோசன பாண்டுரங்க!
பங்கஜமாலி பாண்டுரங்க!
பங்கஜநாப பாண்டுரங்க!
பீதவஸனதர பாண்டுரங்க! (மஹாயோக)

ஶரணாகதப்ரிய பாண்டுரங்க!
ஶ்யாமளகாத்ர பாண்டுரங்க!
ஸௌலப்யஶீல பாண்டுரங்க!
ஸாதுமுரளீவினுத பாண்டுரங்க! (மஹாயோக)

நாமாவளி

விட்டோபா ரகுமாயி விட்டோபா ரகுமாயி

## 88

நம்முடைய ஆஸ்ரம வளாகத்தில் ஸ்ரீ கல்யாணஸ்ரீநிவாஸ பெருமாளுக்கு ஆலயம் அமைத்து, மஹாஸம்ப்ரோக்ஷணம் செய்து அதற்குள் ஒரு வருடம் ஆகிவிட்டது. சென்ற வருடம் தை மாதம் வஸந்த பஞ்சமி அன்றுதான் ஸம்ப்ரோக்ஷணம் நடைபெற்றது. இந்த வருடம் பிப்ரவரி 6-ந் தேதி, வஸந்த பஞ்சமி தினத்தன்று வார்ஷிக பிரதிஷ்டாதின மஹோத்ஸவம் கொண்டாடப்பட்டது.

6-ந் தேதியன்று காலையில், சென்னை மேற்கு மாம்பலத்தில் உள்ள அயோத்யா அஸ்வமேத மஹாமண்டபத்தில் ஸ்ரீ ஸ்வாமிஜி தலைமையில் கும்பாபிஷேக வைபவம் நடைபெற்றது. ஸ்ரீ ஸ்வாமிஜியே ஹநுமார் ஸன்னதிக்கு தீர்த்தம் சேர்த்து, கும்பாபிஷேகம் செய்து வைத்தார்கள். பின்னர் சிறிது நேரம் நம்முடைய தேசத்தில் அமைந்துள்ள திருக்கோயில்களின் பெருமை, கோயில் வழிபாட்டின் அவசியம் போன்றவற்றைப் பற்றியெல்லாம் உரையாற்றினார்கள்.

பிறகு மஹாரண்யம் ஸ்ரீ கல்யாணஸ்ரீநிவாஸபெருமாள் வார்ஷிக பிரதிஷ்டாதின மஹோத்ஸவத்தில் கலந்துகொள்ள நேராக ஆஸ்ரமம் வந்தார்கள். ஆஸ்ரமத்திற்கு அன்று பல ஊர்களிலிருந்தும் பக்தர்கள் வந்திருந்தனர். மதியம் இரண்டு மணி அளவிற்கு, பெருமாளுக்கு திருமஞ்சனம் ஆரம்பித்து, அலங்காரங்கள் முடித்து தீர்த்தபிரசாதம் கொடுக்கும்பொழுது மாலை நான்கு மணி ஆகிவிட்டது.

நம்முடைய ஆஸ்ரமத்தில் உத்ஸவ காலங்களில் வருபவர்களுக்கு எல்லாம் அன்னம் படைக்கவும், வேத வித்யார்த்திகள் வசதியாக தங்கவும் ஒரு சரியான இடம் இல்லாமல் இதுநாள்வரை இருந்து வந்தது. நம்முடைய ஸங்கத்தைச் சேர்ந்த ஸ்ரீ தீனதயாளன் அவர்கள் ஸ்ரீ ஸ்வாமிஜியிடம் வெகுநாளாக தனக்கு ஏதாவது ஒரு கைங்கர்யத்தைக் கொடுக்க வேண்டும் என்று பிரார்த்தித்து வந்தார். அவருடைய புத்ரன் அருண் என்பவர் சில காலம் முன்பு கோபாலனுடைய திருவடியை அடைந்துவிட்டார்.

ஸ்ரீ தீனதயாளன்-ஸ்ரீமதி விஜயகுமாரி தீனதயாளன் தம்பதிகள் தாங்கமுடியாத புத்ரசோகத்தில் இருந்தபொழுதும் தங்களை முழுவதுமாக இறைவாழ்க்கையிலும், ஸத்ஸங்கத்திலும் ஈடுபடுத்திக் கொண்டுள்ளனர். இத்தம்பதிகளே இத்தகைய நிலையிலும் முன்வந்து, மிகவும் வசதியாகவும், நவீனமாகவும் அன்னதானம் செய்வதற்கான கூடத்தையும், வித்யார்த்திகள் தங்குவதற்கான அறைகளையும் கட்டித் தந்துள்ளனர்.

இந்த அன்னதான கூடத்திற்கு ஸ்வாமிஜி, ''ஸந்த் ஏகநாத ஸ்வாமி அன்னதான கூடம்'' என்று பெயர் வைத்துள்ளார்கள். அன்னதான கூடத்தின் திறப்புவிழா ஸ்ரீ ஸ்வாமிஜி முன்னிலையில் 24.01.2003 அன்று கணபதி ஹோமம், வாஸ்து சாந்தி ஹோமம் மற்றும் நவக்ரஹ ஹோமங்களுடன் நடைபெற்றது. ஸ்ரீ தீனதயாளன் - ஸ்ரீமதி விஜயகுமாரி தீனதயாளன் தம்பதியினர் இந்த திறப்பு விழாவில் பங்கேற்றனர்.

முதன்முதலில் அந்த கூடத்தில் பிப்ரவரி 6-ந் தேதி வார்ஷிக பிரதிஷ்டாதின மஹோத்ஸவத்தன்று மாலை நான்கு மணி முதல் ஐந்து மணி வரை நாமஸங்கீர்த்தனமும், அதைத்தொடர்ந்து ஸ்ரீ ஸ்வாமிஜியின் உபன்யாசமும் நடைபெற்றது. அதன் பிறகு பக்தர்கள் எல்லாம் உணவு எடுத்துக்கொண்டு பிரிய மனமில்லாமல் பிரிந்து சென்றனர்.

ஸ்ரீ ஸ்வாமிஜி அன்று உரையாற்றும்பொழுது, புதியதாக கோயில்கள் கட்டுவதை தாம் ஊக்குவிப்பதில்லை என்றும், திருப்பணி செய்யும் கோயில்களில் கூட புதிய ஸன்னதிகளை கட்டுவதற்கு தான் அனுமதிப்பது இல்லை என்றும் கூறினார்கள். ''அப்படியிருக்கையில் இங்கு புதியதாக கோயில் நான் ஏன் கட்டியுள்ளேன்? என்ற கேள்வி உங்களுக்கு எழலாம். இங்கு பகவானே தனக்கு ஒரு கோயில் வேண்டும் என்று ஆசைப்பட்டதால் கட்டியுள்ளேன். இந்த இடம்

''ஹரே ராம ஹரே ராம ராம ராம ஹரே ஹரே ।
ஹரே க்ருஷ்ண ஹரே க்ருஷ்ண க்ருஷ்ண க்ருஷ்ண ஹரே ஹரே ॥''

மஹாமந்திர கீர்த்தனம் அகண்டமாக நடைபெறும் முக்கியமான மையமாக அமையும்'' என்று கூறிமுடித்தார்கள். (தொடரும்)

- ஜயந்தி ஜானகிராமன்

# *பக்தர்களின் கேள்விகளுக்கு ஸ்ரீ ஸ்வாமிஜியின் பதில்கள்*

கேள்வி : உலகத்தில் பலவிதமான சுகங்களை இறைவன்தானே படைத்துள்ளான். அதை அனுபவிப்பதற்கான இந்திரியங்களையும் அவன்தானே கொடுத்துள்ளான். அப்படியிருக்கையில் பகவானை தரிசனம் செய்ய ஆசைப்படும் ஒருவர் இவற்றையெல்லாம் ஏன் துறக்க வேண்டும்?

ஸ்ரீ ஸ்வாமிஜி : ஒரு இடத்தில் ஐந்து நபர்கள் கூடி பலவிதமாகப் பேசிக்கொண்டும், சிரித்துக்கொண்டும் இருக்கின்றார்கள். அப்பொழுது தூரத்திலிருந்து ஒரு மென்மையான இசை கேட்கின்றது. அந்த இசையை நன்றாகக் கேட்டு அனுபவிக்க வேண்டும் என்று ஆசைப்பட்ட அந்த ஐந்து நபர்களும் தங்களுடைய பேச்சு, சிரிப்பு எல்லாவற்றையும் தானாகவே நிறுத்திவிட்டு கூர்ந்து கவனிக்கின்றார்கள் அல்லவா? அதுபோல், உள்ளே இருக்கக்கூடிய அந்த ஆத்ம சுகம் நம்மால் நன்றாக உணரப்பட வேண்டுமானால், நம் இந்திரிய வியாபாரங்கள் எல்லாம் அடங்க வேண்டும்.

கேள்வி : பிரம்ம நிஷ்டர்கள் மௌனமாகத்தானே இருப்பார்கள்?

பதில் : பிரம்ம நிஷ்டர்களாக இருந்தபோதிலும், அவர்கள் அவதார புருஷர்களாக இருந்தால், உலகத்தில் எதற்காக அவர்கள் அவதாரம் செய்தார்களோ அதற்கான காரியங்களில் ஈடுபடத்தான் செய்வார்கள். அப்படித்தானே ஆதிசங்கரர் போன்றவர்கள் எல்லாம் இருந்தார்கள்!

கேள்வி : நான் என்னுடைய பெற்றோர்கள் உயிருடன் இருக்கும் பொழுது அவர்களை Old Age home-ல் கொண்டு விட்டுவிட்டேன். அப்படியிருக்கையில், அவர்கள் இறந்தபிறகு நான் அவர்களுக்கு செய்ய வேண்டிய திதி போன்ற சடங்குகளை எல்லாம் ஏன் செய்ய வேண்டும்?

பதில் : நீத்தார்கள் வாழக்கூடிய அந்த பித்ரு லோகத்தில் இன்னும் Old Age Home எல்லாம் கட்டப்படவில்லை. ஆகவே, நீ அவசியம் திதி போன்ற சடங்குகளைச் செய்துதான் ஆகவேண்டும். மேலும், அவர்வர்களுடைய வாரிசுகள் செய்யக்கூடிய சடங்குகள்தான் அவர்களைப் போய்ச்சேரும். அதற்காகவும் செய்யப்பட வேண்டும்.

கேள்வி : ஞான ஸாதனைகளோ, ராஜயோக ஸாதனைகளோ செய்தால் இறைவனை அடைய பல பிறவிகள் ஆகும் என்றும், பக்தி செய்தால் இப்பிறவியிலேயே அடையலாம் என்று தாங்கள் கூறுவது எப்படி சரி?

பதில் : பகவத் கீதையில் ஞான யோக ஸாதனைகளைப் பற்றி பேசி வரும் பகவான், ஒருவன் இந்தப் பாதையில் சித்தி பெற பல பிறவிகள் ஆகும் என்கின்றான். (பஹூனாம் ஜன்மனாம் அந்தே) அதுபோலவே, ராஜயோகத்தைப் பற்றி பேசும் பகவான், அந்த யோகமும் சித்தியாக அநேக பிறவிகள் ஆகும் என்கின்றான். (அநேக ஜன்ம ஸம்ஸித்தி) ஆனால், பக்தியோகத்தைப் பற்றிப் பேசும்பொழுது, பக்தன் தன்னை அடைவதற்கு பலகாலம் ஆகாது (ந சிராத்) என்று பகவான் கூறுவதை கவனிக்க வேண்டும்.

அஜாமிளன் பரம பாபி. அதில் கருத்து வேறுபாட்டிற்கே இடமில்லை. ஆனால், அவன் பகவந்நாமாவின் மஹிமையால் அந்த பிறவியிலேயே பகவானை அடைந்துவிட்டான். ஜடபரதருடைய சரித்திரம் படிப்பதற்கு பிரமிப்பாகவும், தியாக புத்தியுடனும் வைராக்யத்துடனும் கூடியதாகவும் இருந்தபோதிலும், அவரால் அதே பிறவியில் பகவானை அடைய முடியவில்லை என்பதை கவனிக்கவேண்டும்.

## *ஸ்ரீ துக்காராம் ஸ்வாமிகளின் அபங்கம்*

**தரிச ஜன்மாயாவே - தாஸ விட்டலாசே வ்ஹாவே**
**நாஹீ தரிகாய தோடீ - ச்வான சூகரே பாபுடீ**
**ஜ்யால்யாசே தே பள - அங்கீ லாகோ நேதீ மள**
**துகாம்ஹணே பலே - ஜ்யாச்யா நாவே மானவலே**

''மனிதப்பிறவி கிடைப்பதே விட்டலனின் தாஸனாக இருப்பதற்காகத்தான். அப்படி இல்லையெனில் ஒரு நாயாகவோ, பன்றியாகவோ பிறந்திருக்கலாமே! கிடைத்தற்கரிய மனிதப்பிறவி கிடைத்தும் வீணாக உலகியல் பேச்சுக்களில் ஈடுபட்டால், பிறவிப்பயனை ஒருகாலும் நாம் அடையமுடியாது. விட்டலனின் நாமத்தை சொல்பவர்களே உலகில் வணங்கத்தக்கவர்கள்'' என்று ஸ்ரீ துக்காராம் ஸ்வாமிகள் பாடுகிறார்.

# என் இனிய மனதிற்கு

- ஸ்ரீ ஸ்ரீ ஸ்வாமிஜி

நமக்கு மஹான்களுடைய சரித்திரங்களைப் படிக்கும்பொழுதும், புராணங்களைப் படிக்கும்பொழுதும், அவற்றில் கூறப்பட்டுள்ள விஷயங்கள் பலவற்றில் நம்பிக்கை வரமாட்டேன் என்கின்றது அல்லவா? அல்லது மஹான்களும், புராணங்களும் பேசுவது முன்னுக்குப் பின் முரணாக உள்ளது என்று தோன்றுகின்றது அல்லவா? பாவம், புண்ணியம், தர்மம், அதர்மம், மறுபிறவி, பரலோகம், கர்மாக்கள் இவற்றில் எல்லாம் நம்பிக்கை வரமாட்டேன் என்கின்றது அல்லவா? அல்லது அடுத்தடுத்து சந்தேகங்கள் வந்துகொண்டு இருக்கின்றன அல்லவா? அப்படியானால், நாம் பக்தி மார்க்கத்தைக் காட்டிலும் வேதாந்த மார்க்கத்திற்குத்தான் அதிகாரிகள். உண்மையான பக்தனுக்கு ஸந்தேகமே கூடாது. அதிலும் சொல்லப்போனால், ஆத்மவிசாரம் என்ற மார்க்கத்திற்குத்தான் அதிகாரிகள். ஏனென்றால், இதில் எதுவும் நம்பிக்கையின் அடிப்படையில் அன்றி, பிரத்யக்ஷத்தின் அடிப்படையில் உள்ளது.

நமக்கு எண்ணங்கள் வந்துகொண்டேயிருக்கின்றன. இதற்கு யாருடைய பிரமாணமோ, எந்த சாஸ்திரத்தின் பிரமாணமோ தேவையில்லை. ஏனென்றால், இவை நம்முடைய சொந்த அனுபவம்தானே! ஆத்மவிசாரம் என்பது நம்முடைய சொந்த அனுபவத்தை அடிப்படையாகக்கொண்டது.

ஆனால், ஒருவருக்கு ஆத்மவிசாரமும் சரியாகச் செய்ய முடியவில்லை என்றால், கவலைப்பட வேண்டாம். ஏதாவது ஒரு மந்திரத்தையோ, அல்லது பகவானுடைய நாமத்தையோ விடாமல் சொல்லிவந்தால் கூடப்போதும். 'இது பக்தியாகாதா?' என்றால் 'ஆகாது'. ஏனென்றால், இங்கு ஒரு நாமாவையோ அல்லது மந்திரத்தையோ விடாமல் சொல்லி வருவதனுடைய லட்சியம் மனதை ஒருமுகப்படுத்துவதே! ''அப்படியானால், நான் 'கழுதை, குதிரை' என்று ஏதாவது சொல்லக்கூடாதா? ஏன் இறைவனுடைய நாமத்தையோ அல்லது மந்திரத்தையோ சொல்லவேண்டும்?'' என்றால், பகவந்நாமத்திற்குதான் மற்ற எணணங்களைத் தடுக்கக்கூடிய சக்தி

உண்டு. முதலில் இவையெல்லாம் வேண்டாம் என்றீர்களே என்றால், இவற்றையெல்லாம் உன்னால் நம்ப முடியாததால் வேண்டாம் என்று சொன்னோமே தவிர, அவைகள் எல்லாம் உண்மையல்ல, அல்லது பயனற்றவை என்பது அபிப்ராயமல்ல! ஏதோ ஒரு சொல்லைச் சொல்லி வருவதற்குப் பதிலாக, இதைத்தான் சொல்லிவாயேன்! ஆனால், அந்த மந்திரத்தின் பொருள் தெரியவேண்டும் என்றோ, அந்த நாமத்தின்மீது உனக்கு நம்பிக்கை இருக்கவேண்டும் என்றுகூட அவசியமில்லை. மனது ஒருமுகப்பட்டால் போதும்; அதில் ஆத்மவிசாரம் சுலபத்தில் சித்திக்கும்.

பரீட்சைக்குப் படிக்கும் மாணவன் ஒருவன், ''பலபேருடன் சேர்ந்து படிப்பதுதான் நல்லது; நான் அப்படிப் படித்துத்தான் முதல் மாணவனாக வந்தேன்'' என்கின்றான். இதைப் பலபேர் ஏற்றுக் கொள்வர். அடுத்த வருடம் முதல் மாணவனாக வந்தவன், ''தனிமையில்தான் படிக்கவேண்டும்; அப்பொழுதுதான் அதிகமாக மார்க் எடுக்க முடியும். நான் அப்படித்தான் படித்து அதிக மார்க் எடுத்தேன்'' என்கின்றான். அதுபோல், மஹான்களும் இறைவனை அடைய, சாதனை புரியும் காலத்தில் பல்வேறு வழிகளைக் கடைப்பிடிக்கின்றார்கள். அவரவர்களுக்கு அந்தந்த வழி பலனளித்ததை அனுபவத்தில் உணர்ந்து, அதையேதான் அடுத்தவர்களுக்கும் போதிக்கின்றனர். அது ஒன்றுதான் வழி என்று அர்த்தம் அல்ல. ஆகவே, இதில் முரண்பாடுகளும் இல்லை. மஹான்கள் சொல்லும் வழிகளில், யார்யாருக்கு எது பயனுள்ளதாக இருக்கும் என்று தோன்றுகின்றதோ, அதை அவரவர்கள் பயன்படுத்திக்கொள்ளலாம்.

''மஹான்களால் எல்லாம் செய்ய முடியும்; அவர்களால் முடியாததே இல்லை என்று சொல்வதை எல்லாம் என்னால் நம்பமுடியவில்லை. ஏனென்றால், என்னுடைய சிறிய கஷ்டத்தைக்கூட அவர் போக்கவில்லை'' என்று உனக்குத் தோன்றும். உன்னுடைய சிறிய கஷ்டத்தைப் போக்கவில்லை என்பதற்காக அவர்களுக்குச் சக்தி இல்லை என்பதும், கருணை இல்லை என்பதும் உண்மையல்ல. அதனுடைய காரண-காரியங்கள் அவர்களுக்கே புரியக்கூடியது. 'வெளியில் சொன்னால் என்ன?' என்றால், சுயநலமே அடிப்படையாகக் கொண்ட மக்களுக்கு அதைச் சொன்னாலும் புரியாது.

ஒரு பெரிய கோடீஸ்வரர் இருக்கின்றார் என்று வைத்துக்கொள்வோம். ''அவர் பல கோடிகளுக்கு அதிபதி'' என்று ஒருவனிடம் சொல்லுகின்றோம். ''அது உண்மையானால், அவர் எனக்குச் சில லட்சங்கள் கொடுக்கட்டும்; அப்பொழுதுதான் நம்புவேன்'' என்று அவன் சொன்னால் எப்படி அபத்தமோ, அதுபோல்தான் இதுவும். மஹான்களுடைய மஹிமையைச் சொல்ல வரும்பொழுது, அவர்கள் கடவுளாகவே ஆகிவிடுவதால், அந்த நிலையின் பெருமையையும், உயர்வையும், கௌரவத்தையும் இப்படி எடுத்துச் சொல்கின்றோம். அதற்காக, ''என்னுடைய தலைவலியைப் போக்கச்சொல்! அப்பொழுதுதான் அவர்களை நம்புவேன்'' என்று சொல்வது அபத்தம்!

பகவந்நாமா சொன்னால், உன்னுடைய கஷ்டங்கள் எல்லாம் தீரும். மேலும், பாராயணம், குருபக்தி போன்ற பல ஸத்கார்யங்களை அனுஷ்டித்தால் புண்யம் கிடைக்கும்; கஷ்டங்கள் விலகும்; நன்மைகள் ஏற்படும் என்றெல்லாம் சாஸ்திரங்கள் சொல்லுகின்றன; மஹான்களும் சொல்லுகிறார்கள். ஆனால், இவற்றையெல்லாம் நம்புவதே பலபேருக்குக் கடினம். அவர்களில் பலர், ''நான் இவற்றையெல்லாம் செய்தேன், ஒரு பலனும் ஏற்படவில்லை. நான் வாழ்க்கையில் துயரங்களைத்தான் அனுபவித்து வருகின்றேன்'' என்பார்கள்.

இதற்கு மஹான்கள் கூறும் பதில் என்னவென்றால், ''இவற்றை எல்லாம் நீ செய்யாமல் இருந்திருந்தால் இன்னும் எவ்வளவு துன்பம் வந்திருக்குமோ! இவற்றையெல்லாம் நீ செய்ததால்தான் உனக்கு வரவேண்டியிருந்த ஏதோ ஒரு பெரிய கஷ்டம் விலகியிருக்கின்றது'' என்பதாகும். இது ஒரு சமாதானம் அல்லது ஏமாற்றுவேலை என்றுகூட உனக்குத் தோன்றும். இவை எல்லாம் சமாதானம் மற்றும் ஏமாற்றுவேலையாக இருப்பதற்கு எத்தனை வாய்ப்புக்கள் உள்ளனவோ, அதுபோல் இவை உண்மையாக இருப்பதற்கும் வாய்ப்புகள் உண்டு என்பதை மறுக்கமுடியாது!

நாம் எந்த ஒரு காரியத்தையும் மேலோட்டமாகப் பார்க்கின்றோமே தவிர ஊடுருவிப் பார்ப்பதில்லை. அவற்றுள் சிலவற்றை இங்கு பார்ப்போம். மஹான்களுடைய சரித்திரங்களில் பலவிதமான அனுபவங்கள் இருக்கும். அவற்றையெல்லாம்

எடுத்துரைக்கும் பொழுது, இரண்டு விதமான நபர்களை நான் பார்க்கின்றேன். ஒரு வகையினர், இவற்றையெல்லாம் நம்ப மறுப்பவர்கள்; மற்றொரு வகையினர், தன்னையும் மஹானாக கற்பனை செய்துகொண்டு, தனக்கும் அத்தகைய அனுபவங்கள் இருப்பதாக நினைத்துக் கொள்பவர்கள். இது இரண்டுமே தவறு. இதற்குக் காரணம், மஹான்களின் வாழ்க்கையில் நடந்த அனுபவங்களை மட்டும் நாம் எடுத்துக்கொள்கின்றோம்; அவர்கள் செய்த சாதனைகளையும், கடுமையான தவத்தையும் நாம் செய்ய ஆசைப்படுவதில்லை. எல்லோருக்கும் பலனில்தான் ஆசையே தவிர, முயற்சி செய்வதில் இல்லை.

வீட்டில் யாரிடமும் சொல்லாமல் கிளம்பி திருவண்ணாமலை வந்து, மொட்டையடித்துக்கொண்டு, பூணூலை அறுத்துப் போட்டுவிட்டு கௌபீனம் கட்டிக்கொண்டு உட்கார்ந்துவிட்டதனால் மட்டும் ஒருவர் ரமணராகி விட முடியுமா? பாதாள குகையில் அன்ன ஆகாரம், காற்று, வெளிச்சம் இல்லாதபோதும், சலனம் இல்லாமல் சிலைபோல பலமாதங்கள் – வேண்டாம்! ஒரு பத்து நிமிடம் – நம்மால் உட்கார முடியுமா? இதைத்தான் நாம் சிந்தித்துப் பார்க்க வேண்டும். நம்முடைய நிலையை நாம் நன்றாகப் புரிந்துகொள்ள வேண்டும்.

ஒருவன் ஒரு பெரிய பதவிக்கு வரப்போகின்றான் என்று எல்லோரிடமும் சொல்லி வருகின்றான். ஆசையும் படுகின்றான். ஆனால் எந்த முயற்சியும் எடுக்கவில்லை என்றால் என்ன பிரயோஜனம்? இவனைக் காட்டிலும், எதையும் பேசாமல் முயற்சி எடுப்பவன்தான் உயர்ந்தவன். நம்முடைய ஆசைகள், பேச்சுக்கள் எல்லாம் நம்முடைய முயற்சியைத் தூண்டுபவைகளாகவும், அதற்கு உற்சாகம் அளிப்பவைகளாகவும் அமையவேண்டும். ஆகவே, எந்த விஷயத்தையும் ஆழ்ந்து பார்க்க வேண்டும்.

தியானம், நாமஜபம், பாராயணம், பூஜை, புண்ணியச் செயல்கள் யாவும் அவற்றிற்குரிய பலனைத் தந்துதான் தீரும். ஆனால், அவற்றையெல்லாம் செய்யவேண்டிய விதத்தில் செய்ய வேண்டும். ‘‘என்னால் இதற்குமேல் செய்ய முடியவில்லையே!’’ என்றால், முடிந்தவரையில் செய்; அதற்குமேல் செய்வதற்கு உனக்கு தானாக சக்தி பிறக்கும்.

உதாரணமாக, ஒரு ஊரில் ஸ்ரீராமநவமி உத்ஸவத்திற்கு ஒருவர் பத்துலட்சம் ரூபாய்கள் பணம் கொடுத்தார். சிறிதுகாலத்தில், அவருக்கு வாழ்க்கையில் துன்பம் ஏற்பட்டது. 'நான் ராம நவமிக்கெல்லாம் பணம் கொடுத்தேனே! எனக்கு ஏன் துன்பம் வந்தது?' என்று கேட்கலாம். ராமநவமி கமிட்டியார்கள் அவர் கொடுத்த பணத்தைக் கொண்டு என்ன செய்தார்கள் என்று பார்த்தால், மிகவும் ஆடம்பரமான பந்தல் போட்டார்கள்; சீரியல் விளக்குகள் போட்டார்கள்; Local V.I.P. எல்லோரையும் கூப்பிட்டு நினைவுப்பரிசு வழங்கினார்கள்; கமிட்டியாளர்களைத் துதிசெய்பவராக உள்ள ஒருவரைக்கொண்டு ராமாயணம் சொல்லச் சொன்னார்கள்; பல சங்கீத வித்வான்கள் வந்து பாடிப் பணம் பெற்றுச் சென்றார்கள்; 'எல்லாம் ராமருக்காக தானே!' என்றால், 'நிச்சயமாக இல்லை!' என்பதுதான் உண்மை. இவர்கள் செய்யக் கூடியது எல்லாம் சுய விளம்பரத்திற்கும், ஆடம்பரத்திற்கும்தான்! இதனால் பணம் கொடுத்தவருக்கு என்ன புண்ணியம் விளையும்? ''அவர் என்ன செய்வார்? அவர் நல்ல எண்ணத்தில்தான் கொடுத்தார். வாங்கியவர்கள் நியாய வழியில் செலவழிக்கவில்லை என்றால் இவர் எப்படிப் பொறுப்பாவார்?'' என்று கேட்டால், தகுந்த பாத்திரங்களைச் சோதித்துப் பார்த்துக்கொடுக்க வேண்டியது தானம் செய்பவர்களின் கடமையாகும். மேலும் பல உதாரணங்களைப் பார்ப்போம்.

ஒருவருடைய கையில் நிறையப் பணம் இருக்கின்றது. மார்க்கெட்டுக்குச் செல்கின்றார். அவருடைய மனைவி, ''பகவானுக்குப் பூ வாங்க வேண்டும்'' என்கிறாள். ''அதனால் என்ன? வாங்கிக்கொள்'' என்று அலட்சியமாகப் பையில் கையைவிட்டு பணத்தை எடுத்துத் தருகின்றார். அதைக் கோயிலில் பெருமையாகச் சாற்றிவிட்டு வருகின்றார். இப்படி செய்வதால் என்ன பயன்? மற்றும் ஒருவர் பூஜை செய்யும்போது, கிருஷ்ண விக்ரஹத்திற்கு திருமஞ்சனம் செய்கின்றார். மனதிலே ஏதேதோ நினைத்துக்கொண்டு, கைகள் மட்டும் தாமாக திருமஞ்சனம் செய்து கொண்டிருக்கின்றன. பூஜைக்கு முன்பாக, வேலையாட்கள் பூஜைக்குரிய பாத்திரங்களைத் தேய்ப்பார்கள் அல்லவா? அதற்கும், இதற்கும் என்ன வித்தியாசம் உள்ளது? மனதிலே **பா**வம் (பக்தி) இல்லாமல் செய்யப்படும் பூஜை, அபிஷேகம், ஆராதனைகளால் என்ன பயன்?

மற்றொரு உதாரணத்தைப் பார்ப்போம். ஒரு ஸ்வாமிகள் பல வருடங்களாகப் பூஜை, ஜபம், தியானம் என்று இருந்து கொண்டிருக்கிறார். இரவு படுத்துக்கொண்டால், காம சிந்தனைகளும், பல நிர்வாக விஷயங்களுமே அவருடைய மனதைத் தாக்குகின்றன. பூஜை மற்றும் ஜப, தியானங்களை அவர் ஒழுங்காகச் செய்யவில்லை என்பதற்கு இதைக் காட்டிலும் வேறு என்ன பிரமாணம் வேண்டும்?

ஒரு குழந்தைக்குப் பள்ளிப்பாடங்களைப் படிப்பதற்கு இஷ்டம் இருக்காது. பெற்றோர்கள் அந்தக் குழந்தையைப் படிக்கச் சொல்லி கண்டிப்பார்கள். அந்த குழந்தை ஒப்புக்காக ஒரு புத்தகத்தைக் கையில் வைத்துக்கொண்டு, சும்மா படிப்பது போல் மணிக்கணக்காக உட்கார்ந்திருக்கும். மண்டையில் ஒன்றும் ஏறாது. ஏனென்றால், படித்தால் அல்லவோ ஏறுவதற்கு? அதுபோல்தான் பலர் செய்யும் ஜபம், பாராயணம் முதலியவை எல்லாம்! இவை எல்லாம் என்ன பலன் தரும்? என்பதை உங்கள் யூகத்திற்கே விட்டு விடுகின்றேன்.

பலர் இறைவன் இருக்கின்றானா அல்லது இல்லையா என்ற சந்தேகத்துடனே பக்தி செய்வார்கள். அப்படி செய்பவர்கள், ''எப்படி ஜபம் செய்ய வேண்டும்? பக்தி செய்ய வேண்டும்? யார்போல் செய்ய வேண்டும்?'' என்று கேட்டால், வேறு யாருடைய உதாரணத்திற்கும் போகவேண்டாம். உங்களிடமிருந்தே ஒரு உதாரணத்தைப் பார்க்கலாம். நீங்கள் யதேச்சையாக உங்களுக்கு மிகவும் பிரியமானவருடைய ஜாதகத்தை ஜோதிடரிடம் காண்பிக்கின்றீர்கள். அவர் நீங்கள் யாருடைய ஜாதகத்தைக் காண்பித்தீர்களோ, அவருக்கு ஒரு பெரிய கண்டம் உள்ளது என்று கூறி, ஒரு மந்திரத்தை தீவிரமாக ஜபம் செய்யுமாறு கூறுகின்றார் என்று வைத்துக்கொள்வோம். உடனே, நாம் இறைவனிடம் அழுது, வேண்டி, உபவாசம் இருந்து, முதல் இரண்டு நாட்கள் தீவிரமாக ஜபம் செய்ய ஆரம்பிப்போம். மூன்றாம் நாள் வேறு ஒரு ஜோதிடர் வந்து, ''அப்படியெல்லாம் ஆபத்து ஒன்றும் இல்லை'', என்று கூறிவிட்ட போதிலும், நாம் எதற்கும் இருக்கட்டும் என்று ஜபம் செய்வோம். ஆனால், முன்பு இருந்த தீவிரம் இருக்காது. ஆகவே, உண்மையில் உனக்கு முக்தியில் ஆசை இருந்தால் மட்டும் போதாது. இந்த ஸம்சாரம் உனக்கு ஒரு பெரிய துக்கமாக மாற

வேண்டும். முதல் இரண்டுநாள் பிரியபந்துவிற்காகக் கதறி, அழுது, உபவாசமிருந்து ஜபம் செய்தாயே, அதுபோல் பெரிய துக்கமான-வியாதியான சம்சாரம் போவதற்கு, அது நீங்கும் வரை வேறு சிந்தனையில்லாமல் சாதனை செய்து வரவேண்டும். முடியுமா?

ஆகவே, அவற்றையெல்லாம் நாம் மேலோட்டமாகத்தான் செய்கின்றோமே தவிர, அதற்குத் தேவையான சிரத்தையையும், பக்தியையும் விட்டுவிடுகின்றோம். ஆடம்பரம், அகங்காரம், பெருமை முதலியவற்றோடு விளையாட்டாகச் செய்கின்றோம். அதற்குத் தகுந்த பலன்தான் நமக்குக் கிட்டும்.

அதுபோல், 'நடக்கயிருப்பதுதான் நடக்கும்!' என்று உலக வாழ்க்கையிலும், இறைவாழ்க்கையிலும் முயற்சியற்றவர்களாகவும், சோம்பேறிகளாகவும் பலர் இருப்பதைப் பார்க்கின்றோம். எதையும் மேலோட்டமாக, தப்பும் தவறுமாகப் புரிந்துகொள்வதுதான் மனதினுடைய இயல்பு. இது ஒரு பிராந்தி. ஒரு ஜோதிடரிடம் சென்று ''எனக்கு எவ்வளவு ஆயுள்?'' என்று கேட்கின்றோம். ''80 வருடம் இருக்கின்றது'' என்று அவர் கூறுவதாக வைத்துக்கொள்வோம். அவரும் நல்ல திறமையான ஜோதிடர்தான். அவர் சொன்னவை எவ்வளவோ பலித்தும் உள்ளன. அதற்காக போக்குவரத்து அதிகம் உள்ள ஒரு சாலையில் படுத்துக்கொள்ள முடியுமா? சரி, நடப்பதுதான் நடக்கும் என்பதற்காக, இரவு வீட்டுக்கதவுகளை எல்லாம் பூட்டாமல், படுத்துக்கொள்ள முடியுமா? மனிதர்களான நம்மை மிருகம்போல் படைக்காமல், இறைவன் ஆறாவது அறிவுடன் ஏன் படைத்துள்ளான்? பகுத்தறிவை நமக்கு இறைவன் கொடுக்க வேண்டிய அவசியம் என்ன? நம்மால் ஒரு விஷயத்தை நம்முடைய புத்திக்கு எட்டிய அளவில் எவ்வளவு தூரம் ஆராய்ந்து முயற்சித்து செய்ய முடியுமோ, அந்த அளவில் செய்துவிட்டு, மற்றதை இறைவனிடம் விட்டுவிட வேண்டும்.

''பூரண சரணாகதி என்பது அப்படி அல்லவே! அறிவையே பயன்படுத்தக் கூடாது என்பதுதானே அது'' என்று நீங்கள் கேட்பது என் காதில் விழுகின்றது. அது லட்சியம் (goal). அது நம்முடைய இன்றைய நிலை அல்ல. கபீர்தாஸ் தன்னுடைய மனைவியை அடகு வைத்தபொழுது, இறைவனே பின்னால் வந்து ரக்ஷித்தான். ஏன்

என்றால் அந்தக் கார்யத்தைச் செய்தபொழுது, அவருக்கு உலக உணர்வே இல்லை. அந்த நிலை நமக்கு இல்லை என்பதைப் புரிந்து கொள்ள வேண்டும். அப்படி இல்லை என்றால், அவலை நினைத்து உரலை இடித்த கதையாகிவிடும். கபீர்தாஸ் போன்றவர்கள் இருந்ததுதான் உண்மையான சரணாகதி நிலை. ஆகவே, சரணாகதி என்று வாயினால் பேசிக்கொண்டிருப்பதனாலும், 'பகவான், பகவான்' என்று சொல்லிக்கொண்டிருப்பதனாலும் மட்டுமே ஒருவன் பக்தனாகிவிடமாட்டான். இது ஒரு ஏமாற்றுவேலை.

ஒருவருக்கு நன்றாக சர்க்கரை வியாதி இருப்பதாக வைத்துக் கொள்வோம். அவர் ஒரு பெரிய லட்டுவை எடுத்து வாயில் போட்டுக்கொள்கின்றார். பக்கத்தில் இருப்பவர், ''இதைச் சாப்பிடாதீர்கள்! உடம்புக்கு ஒத்துக்கொள்ளாது'', என்கின்றார். உடனே அவர், ''பகவான் இருக்கின்றார்'', என்கிறார். ஆனால், ''பகவான் இருக்கின்றார், நம்மைக் காப்பாற்றுவார்'', என்ற நம்பிக்கையில் அந்த லட்டுவைச் சாப்பிடுகின்றாரா அல்லது லட்டு சாப்பிட வேண்டும் என்ற ஆசையால் சாப்பிடுகின்றாரா என்றால், லட்டுமேல் உள்ள ஆசைக்கு 'பகவான்' என்பதனை அவர் துணையாக இழுத்துக் கொள்கிறார். இந்த அளவில்தான் உலகத்தில் நம்முடைய நிலை உள்ளது.

நாம் மீண்டும் மீண்டும் சொல்வது போல், பெரிய பெரிய அவதார புருஷர்களே கடுமையாகப் பல வருடங்கள் தவம் இயற்றியிருக்கிறார்கள் என்பதை நாம் அடிப்படையில் நன்றாக உணர வேண்டும். ஆகவே, தியானம், ஜபம், ஸாக்ஷாத்காரம் இவையெல்லாம் ஒருநாள், இரண்டுநாள் விஷயமல்ல என்பதை நாம் நன்றாக மனதில் கொள்ளாவிட்டால், நாம் ஏமாந்துவிடுவோம்.

முதலில், நாம் இறைவனை எதற்காக வழிபடுகின்றோம் என்று ஒரு தீர்மானத்துக்கு வரவேண்டும். மோக்ஷத்திற்காகவா? அல்லது உலக இன்பங்களுக்காகவா? மோக்ஷத்திற்காக என்று கூறிக்கொண்டே, இடையிடையில் பந்தபாசத்தால் தாக்கப்பட்டு, 'ஏன் துன்பங்கள் வருகின்றது?', என்று கேட்கக்கூடாது. ஒருவருக்குத் துன்பம் வருவதற்கு நிச்சயமான காரணம் அவருடைய பாவம்தான். 'ஏன் எனக்கு

இதுபோல் கஷ்டங்கள் வருகின்றன?', என்றால் அதற்கும் இதே பதில்தான். ஆனால், 'நான் நம்பமாட்டேன்' என்றால், போ!

துன்பத்திலே மனது விவேகத்தை இழந்துவிடும். தர்ம-அதர்மம் தெரியாது. கடவுளை அடைவதற்காகத்தான் நான் பக்தி செய்கின்றேன் என்றால், இடையில் துன்பம் வரத்தான் வரும். அது உலக இயற்கை! எப்பொழுது அடுத்தவனுக்கு மரணம், திருட்டு, நஷ்டம், அவமானம் எல்லாம் வருகின்றதோ, அப்பொழுது நமக்கும் அதெல்லாம் வரும். நமக்கு ஏன்? ரமணருக்குப் புற்றுநோய் வந்தது. பத்ராசல ராமதாஸர் ஜெயிலில் அடைபட்டார். மீரா எத்தனை அவமானப்பட்டாள். ராமகிருஷ்ணருக்கு புற்றுநோய் வந்தது. துன்பங்களை அனுபவிக்காத பக்தர்களே இல்லை. ரமணருக்குத் தொண்டு செய்தவர்கள் எவ்வளவோ பேர் சிறுவயதிலேயே மரணம் அடைந்துள்ளார்கள். ஞானி அவர்களைக் காப்பாற்றி என்ன செய்யப் போகின்றான்? ஏன் காப்பாற்ற வேண்டும்? இதுதான் உண்மை. இது கசக்கும்! இது புரியவில்லை என்றால், காம்யபக்தி செய்!

பக்தியினால் ஸாத்விகமான தெய்வங்களை வசப்படுத்துவது என்பது கடினம். ஆகவே கஷ்டங்கள் போகவேண்டுமென்றால், அது அதற்கான தேவதைகளையோ, நவக்ரஹங்களையோ வழிபட்டுப் பரிகாரங்களைச் செய்து நிவாரணம் தேடிக்கொள்! அதிலும் உன்னுடைய கர்மாவுடைய வீர்யத்தையும், நீ செய்யக்கூடிய பரிகாரத்தின் வீர்யத்தையும் பொறுத்துத்தான் பலன் ஏற்படும். உலகத்தில் எவ்வளவோ மஹான்களால் பக்தர்கள் கடன் தொல்லையிலிருந்து விடுபட்டுள்ளார்களே; அவர்களால் செல்வம் அடைந்துள்ளார்களே; வாக்வன்மை அடைந்துள்ளார்களே; மரண ஆபத்திலிருந்து காப்பாற்றப்பட்டுள்ளார்களே என்றால், இவை எல்லாம் உண்மைதான். ஆனால், அதே மஹான்களின் பக்தர்கள் எல்லோருமே கடன்தொல்லை அற்றவர்களாக, வியாதி அற்றவர்களாக, தரித்திரம் அற்றவர்களாக, அகால மரணம் அற்றவர்களாக இல்லை என்பதும் உண்மை!

ஆகவே, விவேகத்துடன் ஸாதனை செய்! இறைவாழ்க்கை என்று வந்து சோம்பேறியாக இருந்து, இகம்-பரம் இரண்டும் இல்லாமல் செய்துகொள்ளாதே!

# வேத கதைகள் - 69

- தர்மஜ்ஞர், வாங்முக ஸார்வபௌம, மேலக்காவேரி
ப்ரஹ்மஸ்ரீ பஞ்சாபகேஶ ஶாஸ்த்ரிகள்

## வஸிஷ்டரும் விஸ்வாமித்ரரும்

ஒரு சமயம், வஸிஷ்டருக்கும் விஸ்வாமித்ரருக்கும் கடுமையான போர் ஏற்பட்டது. வஸிஷ்டர் சாபத்தால் விஸ்வாமித்ரருக்கு கொக்கு உருவம் ஏற்பட்டது. விஸ்வாமித்ரரின் சாபத்தால் வஸிஷ்டருக்கு ஆடீபகம் என்ற பறவை உருவம் ஏற்பட்டது. இருவரும் கங்கையின் கரையில் ஒரு மரத்தின் கூடுகளில் வஸித்து வந்தனர். ஒன்றுக்கும் உதவாத சண்டையானது பதினாயிரம் வருடங்களுக்கு கடுமையாக நடந்தது.

இச்சண்டையின் காரணம், அரிச்சந்திரன் என்ற அரசனை விஸ்வாமித்ரர் துன்புறுத்தியதால் வஸிஷ்டருக்கு கோபம் ஏற்பட்டது. அதனால், வஸிஷ்டர் விஸ்வாமித்ரருக்கு சாபம் அளித்தார். அரிச்சந்திரன் உண்மை பேசுபவன். அரிச்சந்திரனுக்கு பிள்ளை இல்லாதபோது வஸிஷ்டர் உபதேசத்தால் வருணனை வேண்டினான். வருணனும் உனக்கு பிள்ளையை அளிக்கிறேன். அந்த பிள்ளையை வைத்து யாகம் செய்ய வேண்டும் என்று கூறினான். அரசனும் ஒப்புக் கொண்டார். வருணன் அருளால் அரிச்சந்திரனுக்கு சந்த்ரமதி என்ற மனைவியினிடத்தில் ரோஹிதன் என்ற பிள்ளை பிறந்தான். பிள்ளை பாசத்தால் அவனை வைத்து அரிச்சந்திரன் யாகம் செய்யவில்லை. அதனால் கோபம் கொண்ட வருணன் அரிச்சந்த்ரனுக்கு வருண பாஸம் (ஜலோதரம்) என்ற வ்யாதி ஏற்படுமாறு சபித்தான். வ்யாதியினால் அரசன் மிகவும் துன்பப்பட்டான்.

அரிச்சந்திரன் பிள்ளையான ரோஹிதன் தன் உயிருக்கு ஆபத்து ஏற்படும் என்று பயந்து ஒளிந்துகொண்டான். தன் வ்யாதி விலக வஸிஷ்டர் உபதேசம் செய்தபடி அஜிகர்தர் என்ற முனிவரின் நடு மகனான ஶுநஸ்ஶேபனை விலைக்கு வாங்கி யாகம் செய்தான். தன் உயிருக்கு ஆபத்து ஏற்பட்டது என்று உணர்ந்த ஶுநஸ்ஶேபன் விஸ்வாமித்ரரை சரண் அடைந்தார். விஸ்வாமித்ரர் அரசனிடம் ஶுநஸ்ஶேபனை விட்டுவிடும்படி கூறினார். ஆனால், அரசன்

ஒப்புக்கொள்ளவில்லை. அதனால், விஸ்வாமித்ரர் தன் செயலை கேட்காத அரிச்சந்திரனிடம் கோபம் கொண்டு அரசரை பல விதத்தில் துன்புறுத்தினார்.

இதனால் கோபம் கொண்ட வஸிஷ்டர் ஒரு குற்றமும் செய்யாத தன் சிஷ்யனான அரிச்சந்திரனை பலவிதமாகத் துன்புறுத்தியதால் கொக்கு உருவம் ஏற்படுமாறு விஸ்வாமித்ரருக்கு சாபமளித்தார். விஸ்வாமித்ரரும், வஸிஷ்டருக்கு ஆடீபகம் என்ற பறவையாக மாற சாபமளித்தார். சாபமடைந்த இருவரும் ஓடைகளிலும், கூடுகளிலும் வாழ்ந்தனர். தினந்தோறும் கடுமையான போர் செய்தனர். இருவர் உடல்களிலும் ரத்தம் வெளிப்பட்டு புண் ஏற்பட்டு துன்பம் அடைந்தனர். இதனால் உலகமே அசைவற்று நின்றது. யாவரும் நான்முகனை வேண்டினர். ப்ரம்மாவும் அவர்கள் முன் தோன்றி போரை விலக்கி சாபத்தையும் போக்கினார். ப்ரம்மா இருவருக்கும் உபதேசம் செய்து விரோதத்தை ஒழித்து சமாதானம் செய்து வைத்தார்.

எவ்வளவு உயர்ந்தவராக இருந்தாலும் நான் என்ற அஹங்காரம் ஏற்பட்டால் அவன் அழிவை அடைகிறான். இந்த அஹங்காரம் விஸ்வாமித்ரருக்கு இருந்ததால்தான் அவருக்கு கடும் துன்பம் ஏற்பட்டது. அரிச்சந்திரன் என்னைச் சார்ந்தவன் என்ற மமகாரம் வஸிஷ்டருக்கு இருந்தது. எனவே அவருக்கும் துன்பம் ஏற்பட்டது. இந்த வரலாற்றினால் நாம் அறிந்துகொள்ள வேண்டிய உண்மை. ''நான், என்னுடையது'' என்ற அஹங்கார மமகாரங்களை விலக்க வேண்டும் என்பதாகும்.

இந்த கதை க்ருஷ்ண யஜுர்வேதத்தில் விஸ்வாமித்ர ஜமதக்னி வஸிஷ்டேன அஸ்பர்தேதாம் என்ற இடத்தில் சுருக்கமாகக் கூறப்பட்டுள்ளது.

---

*காஞ்சி ஸ்ரீ மஹாபெரியவர் ( ஸ்ரீ ஸ்ரீ சந்திரசேகரேந்திர ஸரஸ்வதி ஸ்வாமிகள் ) எந்த ஒரு காரியத்தில் தான் ஈடுபட்டபொழுதும், தனது குருவான ஆதிசங்கரரைக் காட்டிலும் தான் அதிகமாக செய்தோம் என்று வந்துவிடக்கூடாது என்பதில் மிகவும் கவனமாக இருப்பார்கள்.*

- ஸ்ரீ மஹாபெரியவர் பற்றிய உபன்யாஸத்தில் - ஸ்ரீ ஏகாம்ர சாஸ்திரிகள்

# எந்தரோ மஹானுபாவுலு-59

ஒரு சமயம், முராரிகுப்தா இனிய குரலில், ரகுவீராஷ்டகம் என்ற எட்டு ஸ்லோகங்களை பக்தியுடன் பாட அதைக்கேட்டு மஹாப்ரபு ப்ரஸன்னமடைந்து முராரிகுப்தாவின் தலையில் தன் சரணங்களை வைத்தார். பிறகு அவரது தலையில் ராமதாஸர் என்று எழுதினார். ப்ரபுவின் இப்படிப்பட்ட அனுக்ரஹத்தைப் பெற்ற முராரிகுப்தா பரவசத்துடன் வீடு திரும்பினார். தன் மனைவியை தனக்கு அன்னமிடச் சொன்னார். அன்னத்தில் நெய்யைவிட்டு பிசைந்து தன் கண்ணில் பட்டவர்களுக்கெல்லாம் பரவசத்துடன் ஊட்டினார். தானும் அளவில்லாமல் உண்டார். அவர் மனைவி ஆச்சர்யப்பட்டாள். ஆனாலும், பதிவ்ரதையான அவள் ஒன்றும் சொல்லவில்லை. இப்படியே நிறைய சாப்பிட்டுவிட்டு அவர் உறங்கிவிட்டார். காலையில் எழுந்தவுடன் மஹாப்ரபு தன் வீட்டில் உட்கார்ந்திருப்பதைக் கண்டார். அவசரமாக எழுந்து ப்ரபுவின் பாதங்களை வணங்கி இப்படி அகாலத்தில் எழுந்தருளிய காரணத்தைக் கேட்டார். ப்ரபு சிரித்துக்கொண்டே, ''நீரே வைத்யராக இருந்துகொண்டு எனக்கு ஆபத்து விளைவித்துவிடுகிறீர்கள், ஏதாவது மருந்து கொடுங்கள்'' என்றார்.

ஆச்சர்யத்துடன் முராரி, ''ப்ரபோ! மருந்தா? எந்த ரோகத்திற்கு மருந்து வேண்டும். இரவுக்குள் உங்களுக்கு என்ன ஆயிற்று?'' என்று கேட்டார். ப்ரபு சிரித்தார். பிறகு, ''என்ன ஆயிற்று என்று உனக்குத் தெரியாதா? உன் மனைவியைக் கேள், சொல்வாள். நேற்று நீ எவ்வளவு உணவு கொடுத்தாயோ அத்தனையும் நான்தான் சாப்பிட்டேன்! எனக்கு அஜீர்ணம் ஏற்பட்டுவிட்டது. அதற்கு மருந்தும் உன்னிடம்தான் உள்ளது'' என்று கூறி அங்கிருந்த முராரிகுப்தாவின் எச்சில்பாத்திரத்தில் இருந்த ஜலத்தைக் குடித்தார். இதைக் கண்டு பதறி, முராரி அவரை தடுத்து நிறுத்த முயன்றார். ஆனால், அதற்குள் ப்ரபு அத்தனை நீரையும் குடித்துவிட்டார். முராரி, ப்ரேமையால் அழுதுகொண்டே, ப்ரபுவின் சரணங்களில் வீழ்ந்தார்.

ஒருநாள் ப்ரபு முராரியிடம், ‘‘முராரி! நீ உன் அத்யந்த ப்ரேமையால் ஸ்ரீக்ருஷ்ணனை வசம் செய்துவிட்டாய். உனது ப்ரேமை என்னும் கயிற்றால் க்ருஷ்ணனை அவிழ்த்துக்கொண்டு போகமுடியாமல் சுற்றிக்கட்டி விட்டாயே!’’ என்றார். இதைக் கேட்டு முராரி குசேலரின் ஸ்லோகத்தைப் பாடினார். (‘‘பகவானின் தயாள குணமென்னே! பாபகர்மங்கள் நிறைந்த தரித்ர ப்ராஹ்மணனான நான் எங்கே! ஸம்பூர்ண ஐச்வர்யங்களுக்கு மூலமான நிகிலபுண்ய நிதியான ஸ்ரீக்ருஷ்ணன் எங்கே! இருந்தும், நல்ல குலத்தில் பிறந்த ஒரே காரணத்திற்காக என்னை தன் தோள்களுடன் இணைத்து ஆலிங்கனம் செய்துகொண்டானே! க்ருஷ்ணனின் காரணமில்லாத க்ருபைதான் இதற்குக் காரணம்’’) ப்ரபுவும், முராரிகுப்தாவின் இப்படிப்பட்ட சமயோசிதமான பதிலைக் கேட்டு ஆனந்தப்பட்டார்.

இனி அத்வைதாசார்யருக்கு ஏற்பட்ட அனுபவத்தைப் பார்ப்போம்.

(தொடரும்)

- ஜயந்தி ஜானகிராமன்

---

Visit us at www.madhuramurali.org for

1. Detailed reports of major mission / satsang events with pictures viz. Utsavams, Samprokshanams, Thirthayatras, Bhagavatha Sapthaham.
2. Online Spiritual magazine "Madhura Murali" every month in English/Tamil.
3. Satsang news & updates on mission activities.
4. Sri Swamigal's lectures/essays
5. Articles on religion, Philosophy, lives of saints.
6. Downloadable free audio "Hare Rama......." Mahamantra chanting rendered in various raagas & more.

# பாலகர்களுக்கு ஒரு கதை - 63

புரிகை என்ற ஊரை பௌரிகன் என்ற அரசன் ஆண்டுவந்தான். மக்களைத் துன்புறுத்தி கொடுங்கோல் ஆட்சி செய்த அந்த அரசன், தான் செய்த பாவங்களின் விளைவாக மீண்டும் ஒரு நரியாகப் பிறக்க நேர்ந்தது. ஆனால், இறையருளால் அந்த நரிக்கு முன் ஜன்மம் பற்றிய விபரங்கள் நன்றாக ஞாபகமிருந்தது. முற்பிறவியில் செய்த பாவங்களுக்காக மிகவும் மனம் வருந்திய நரி, மாமிசம் உண்பதைத் துறந்து, மரத்திலிருந்து கீழே உதிர்ந்து விழுந்த பழங்களை மட்டுமே உண்டு, எப்பொழுதும் மயானத்தில் ஒரு துறவிபோல் வாழ்ந்து வந்தது. இந்த நரியின் வித்தியாசமான போக்கு மற்ற நரிகளுக்குப் பிடிக்கவில்லை. தங்களைப்போலவே மாமிசம் உண்டு, வனத்தில் வாசம் செய்யுமாறு பலமுறை மற்ற நரிகள் கூறியபோதும், இந்த நரி, தனது புனிதமான வாழ்க்கைமுறையை மாற்றிக்கொள்ள மறுத்துவிட்டது. தங்களைக் காட்டிலும் இந்த நரி உயர்ந்த நிலையில் இருப்பதை மற்ற நரிகளால் பொறுத்துக்கொள்ள முடியவில்லை.

இப்படிப்பட்ட மன உறுதியுடன் தன் ராஜ்யத்தில் ஒரு நரி இருப்பதைப் பற்றிக் கேள்விப்பட்ட காட்டு அரசனான புலி, அதைத் தனது அமைச்சராக ஆக்கிக்கொள்ள விரும்பி, நரியை அழைத்துப் பேசியது. புலியின் விருப்பத்தை அறிந்துகொண்ட நரி, ‘‘எனது ஸ்வபாவத்திற்கு இந்த அமைச்சர் பதவியெல்லாம் சரிவராது. எனக்கு அரண்மனை, ராஜபோகங்கள் போன்றவற்றில் எல்லாம் எவ்விதமான பற்றுதலும் இல்லை. நான் சுதந்திரமாக பழங்களை உண்டு, நதிநீரைக் குடித்துக்கொண்டு இன்பமாக வாழவே விரும்புகிறேன். அந்த வாழ்க்கையில் கிடைக்கும் இன்பம், அமைச்சரானால் கிடைக்காது. எனவே, எனக்கு இந்த பதவியை ஏற்பதில் நாட்டமில்லை’’ என்று பதிலளித்தது.

ஆனால், புலி விடாப்பிடியாக நிர்பந்தப்படுத்தியதால் நரி, ‘‘அரசனே! நீ இவ்வளவு பிடிவாதமாகயிருப்பதால் நான் அமைச்சராக ஒப்புக்கொள்கிறேன். ஆனால், அதற்குமுன் நான் விதிக்கும் நிபந்தனைகளை ஏற்பதாக, நீ உறுதியளிக்க வேண்டும். என்மேல் பொறாமை கொண்ட உனது மற்ற அமைச்சர்கள், என்மீது எந்தவித பொய்யான குற்றத்தைச் சுமத்தினாலும், நீ என்மேல் வைத்துள்ள நம்பிக்கையை இழக்கக்கூடாது. நான் உனக்கு சொல்ல வேண்டுமென்று நினைக்கும் ஆலோசனைகளைத்

தனிமையில்தான் சொல்வேன். உனது சுற்றத்தார் விஷயத்தில் நீ என்னை ஆலோசிக்கக்கூடாது. மேலும், நான் கூறும் ஆலோசனைகளை நீ ஒரு எச்சரிக்கையாக மட்டுமே எடுத்துக்கொள்ள வேண்டும். அதை மட்டுமே காரணமாகக் கொண்டு நீ யாரையும் அழித்துவிடக்கூடாது. நீ இந்த நிபந்தனைகளை எல்லாம் ஏற்றால், நான் அமைச்சராகப் பொறுப்பு ஏற்றுக் கொள்வேன்'' என்று கூறியது. புலியும் நரியின் நிபந்தனைகளை ஏற்றுக் கொண்டது.

அமைச்சராகப் பொறுப்பேற்றுக் கொண்ட நரி மிகவும் நாணயமாகத் தன் கடமையை ஆற்றியது. அதற்கு முன்வரை புலியிடம் பணிபுரிந்த மற்ற மிருகங்களெல்லாம் பல மோசடிகளைச் செய்துவந்தன. ஆனால், நரியின் நேர்மையான நிர்வாகத்தில் அவை தங்கள் இஷ்டம்போல் திருட்டுக்களைச் செய்ய முடியாமல் தவித்தன. நரியையும் தங்கள் போக்குக்கு மாற்ற பலமுறை முயன்று தோற்றன. இறுதியில், ஏதாவது சதிசெய்து புலியின் மனதில் இந்த நரியைப் பற்றி சந்தேகத்தைக் கிளப்பிவிடுவது என்று மற்ற அமைச்சர்கள் எல்லாம் தீர்மானித்தன. அதன்படியே ஒருநாள், புலிக்காக சேகரித்து வைக்கப்பட்ட விசேஷமான மாமிசத்தை எடுத்து நரியின் வீட்டில் போட்டுவிட்டன. மற்ற அமைச்சர்களின் இந்த சதிவேலையை அறிந்து கொண்ட நரி, ''அரசன் நம்மை எக்காரணத்திற்காகவும் சந்தேகிப்பதில்லை என்று உறுதியளித்து உள்ளானே! நமக்கு அளித்த வாக்குறுதியை அரசன் காப்பாற்றுகிறானா என்பதை அறிய இதுவே சரியான தருணம். அப்படி ஒரு வேளை, அரசன் நம்மீது சந்தேகம் கொண்டாலும் நல்லதுதான். இந்த அரச வாழ்க்கை என்ற பந்தத்திலிருந்து விடுபட இதுவே நல்ல சந்தர்ப்பம்!'' என்று எண்ணி, அரசனிடம் இதுபற்றி எதுவும் தெரிவிக்காமல் இருந்துவிட்டது.

உணவு வேளை வந்தபொழுது, தனக்கு வழக்கமாக வைக்கப்படும் மாமிசத்தைக் காணாமல் புலி கடுங்கோபம் கொண்டது. தனது உணவை எடுத்தது யாரென்று வினவிய புலியிடம் மற்ற அமைச்சர்கள், ''நீங்கள் மிகவும் நம்பிய உங்களது முக்கியமான அமைச்சர்தான் மாமிசத்தை எடுத்தது. மாமிசம் உண்பதில்லை என்று அந்த நரி சொல்வதெல்லாம் ஏமாற்றுவேலை!'' என்று புகார் கூறின. புலி, நரியின் வீட்டில் மாமிசம் இருக்கிறதா என்று அறிந்துவர தன் பணியாட்களை அனுப்பியது. நரியின் வீட்டிற்குச் சென்று திரும்பிய பணியாட்கள் புலியிடம், ''அரசே! உங்களுக்கு என்று சேகரிக்கப்பட்ட மாமிசம் நரியின் வீட்டில்தான் உள்ளது'' என்று

பதிலளித்தன. கோபத்தின் உச்சத்தை அடைந்த புலி தன்னை ஏமாற்றிய நரியை கொன்றுவிடுவது என்று தீர்மானித்து கிளம்பியது.

அப்பொழுது புலியின் தாய், புலியிடம், ''அவசரப்பட்டு நரியின் மீது சந்தேகம் கொள்ளாதே! நீ அளித்த ராஜ போகங்களை எல்லாம் கூட ஏற்க மறுத்துவிட்ட அந்த நரி இப்படியொரு செயலை நிச்சயமாகச் செய்திருக்காது. இது, அதன் நேர்மையான நிர்வாகத்தை விரும்பாத மற்ற அமைச்சர்களின் சூழ்ச்சியாகத்தான் இருக்க வேண்டும். நீ முன்பு நரியிடம் எக்காரணத்தைக் கொண்டும் அதை சந்தேகிப்பதில்லை என்று அளித்த வாக்குறுதியை மறந்துவிடாதே!'' என்றெல்லாம் அறிவுறுத்தியது.

மேலும் ''கஞ்சர்களுக்கு தயாளகுணம் படைத்தவர்களிடமும், பலவீனமானவர்களுக்கு பலசாலிகளிடமும், தரித்திரத்தில் வாடுபவர்களுக்கு செல்வந்தர்களிடமும், முட்டாள்களுக்கு பண்டிதர்களிடமும், அழகு இல்லாதவர்களுக்கு அழகானவர்களிடமும், அதர்மமாக வாழ்பவர்களுக்கு தர்மத்தின் வழி நடப்பவர்களிடமும் பொறாமை ஏற்படுவது உலக இயல்பு. எனவே வஞ்சகர்களான மற்ற அமைச்சர்கள் நேர்மையான அந்த நரியைப் பார்த்து பொறாமை கொள்வது இயற்கையே! எனவே, அவசரப்பட்டு எந்த முடிவும் எடுக்காதே!'' என்று தாய்ப்புலி கூறியது.

இவ்வாறாக தாய்ப்புலி பேசிக்கொண்டிருக்கும்பொழுது, சூழ்ச்சி செய்த அமைச்சர்கள் கூட்டத்திலிருந்து வந்த ஒரு நரி தாங்கள் செய்த தவறை ஒப்புக்கொண்டு, முழு விவரங்களையும் தெரிவித்தது. உண்மையை உணர்ந்த புலி, தனது முக்கியமான அமைச்சரான நரியை ஒரு கணம் சந்தேகித்தது குறித்து மிகவும் வெட்கப்பட்டு வருந்தியது.

நரியிடம் சென்று தன் தவறை ஒப்புக்கொண்டு மீண்டும் நட்பு பாராட்டியது. ஆனால் நரியோ, ''மற்றவர்கள் கூறியதை நன்கு ஆராய்ந்து பார்க்காமல் நம்பியது அரசனான உனக்கு அழகல்ல. மேலும், நீ எனக்கு அளித்த வாக்குறுதியையும் காப்பாற்றத் தவறிவிட்டாய். இனியாவது, எந்த ஒரு விஷயத்தையும் தீர விசாரித்து, நல்லவர்கள் போல் வேடமிடும் தீயவர்கள் யார்? சந்தர்ப்ப சூழ்நிலையால் தீயவர்களாகக் காட்டப்படும் நல்லவர்கள் யார்? என்பதை அறிந்து ஒரு முடிவுக்கு வா!'' என்று கூறி, நேர்மைக்கு இலக்கணமாக பணிபுரிந்த தன்னை அரசன் சந்தேகப்பட்டதை மிகப்பெரிய அவமானமாகக் கருதி, உயிர் துறந்தது.

# மாலே மணிவண்ணா - 6

- மகாவித்துவான், மயிலம் வே. சிவசுப்பிரமணியன்

'சப்தம்' என்கின்ற 'ஒலி' என்னும் குணத்துக்குரியது ஆகாயம். அந்த ஒலியுடனே தோன்றி வானமாகிய மூலப்பொருள் வளர்கிறது. ஒலியாகவே வளர்கிற ஆகாயம் தோன்றிப் பல யுகங்கள் ஆகின்றன.

அந்த வானத்திலிருந்து எல்லாப் பொருள்களையும் இயங்கச் செய்கிற 'பரிசம்' என்கின்ற குணத்துக்குரிய காற்று, அடுத்துத் தோன்றி பல ஊழிகள் செல்கின்றன. அக்காற்றிலிருந்து உருவம் என்னும் குணத்தையுடைய நெருப்பு தோன்றிப் பல ஊழிகள் ஆகின்றன. அதன்பின்னர் அத்தீயினின்றும், 'ரசம்' என்னும் சுவைக்குணத்தை உடைய பனியும் மழையும் ஆகிய நீர் சூழ்ந்து வெள்ளம் பெருகிய ஊழிகள் பலப்பல சென்றன.

முன் அழிகின்ற (ஒடுங்குகின்ற) காலத்து நிலம் வெள்ளத்தில் மூழ்கியது. ஆதலின் இப்பொழுது நிலத்தை உள்ளடக்கிய வெள்ளத்தை 'மீண்டும் வெள்ளம் மூழ்கி' என்று பரிபாடல் நுட்பமாக உரைக்கிறது. முன்னர்த் தோன்றிய நான்கு பூதங்களுக்கும் உள்ளீடாகிய நிலம் நீரினுள் தோன்றி நிலைத்துப் பல ஊழிகள் சென்றன. இந்தக்காலத்தை ஒரு கணக்கினால் எண்ணுவதற்குச் சில எண்கள் உள்ளன.

ஒன்று, பத்து, நூறு, ஆயிரம், லக்ஷம், கோடி இதுவரை நாம் அறிவோம். இதற்குமேல் வெள்ளம், தாமரை, சங்கம், ஆம்பல், குவளை, நெய்தல் என்பன கோடிக்கு மேல் உள்ளவை. இந்த எண்களின் அளவான ஊழிகள் (யுகங்கள்) பலப்பல சென்றன. நீருள் மூழ்கிக்கிடந்த நிலத்தில் உயிர்கள் வாழவேண்டுமானால் அந்நிலத்தை நீருக்கு மேலாக நிறுத்த வேண்டும் அல்லவா. திடப்பொருளாகிய நிலம் நீரிலிருந்து மேலே வந்தால்தான் உயிர்களும் பயிர்களும் வளரும். அந்நிலத்தை மேலே கொண்டுவந்து நிறுத்துவதற்காக, ஆதிவராகமாக அற்புதக்கோலம் கொண்டு 'நாற்றம்' என்னும் கந்தத்துக்கிடனாகிய, மற்ற நான்கு பூதங்களையும் விளக்கிக்காட்டுதற்குரிய இந்த பூமியை நீரிலிருந்து எடுத்து நிறுத்தி

நாம் வாழ, வழிபட அருள் செய்த பெருமானாகிய ஸ்ரீ விஷ்ணுவின் தொன்மையை அறிய ஒருவராலும் இயலாததாகும். அத்தகைய பெருஞ்செயலைச் செய்ததனால் இந்த உலகம் பெற்ற பேற்றை 'ஆதிவராக கற்பம்' என்னும் பெயர் உணர்த்தும். எம்பெருமானுடைய அளப்பரும் கருணைச் செயல்கள் பலவற்றில் ஒன்றினை உணர்த்துவது 'ஆதி வராக கற்பம்' என்னும் பெயராகும்.

இவ்வாறு நீ ஆதிவராகமாய் உருவெடுத்து இந்நிலவுலகத்தை நீரின் மேல் கொண்டுவந்து நிறுத்தாவிடின் உயிர்களாகிய எம்மனோர்க்கு வாழ்வு எங்கே? பரமபதம் பெறுதல் எங்கே? எங்களுக்காக நீ இன்று கொண்ட திருவடிவின் ஏற்றம் அல்லவா - நீ பூவராகனாய்ப் பொலிந்து நின்றது. இந்த ஒன்றின் முதுமையே உணர இயலாததானால் உன்னுடைய பல செயல்களுக்கும் காரணமான தொன்மையை தொன்மைக்குரிய கற்பங்களை யாரால் அறியமுடியும்?

யாராலும் அறிய முடியாத தொன்மையுடைய சக்கரப் படையை ஏந்திய திருமாலே! 'ஆழி முதல்வ' நின்னை வழிபடுகின்றோம்; வணங்குகின்றோம் என்று தொடக்கமே சிறப்பாக உள்ளது. புராண நோக்கில் வராக அவதாரத்தைக் கருதாமல் அறிவியல் நோக்கில் ஆழநோக்கி வராக அவதாரத்தைச் சிந்திக்க வைத்துக் கீரந்தையார் திருமாலைப் பரவுகிற பாடல் நவில்தொறும் நயம் பயப்பது. தொடர்ந்து மேலே பார்ப்போம். (தொடரும்)

With Best Compliments from

**Poornima Enterprises**

Sales & Service

No. 98, Margosa Road, CITI Bank Building
Malleswaram, Bangalore - 3. Tel. : 3346041, Fax : 3349928

**Prop. C.R. RANGAN**

Authorised dealers since 1974 for Eifco Machine Tools Pvt. Ltd. Coimbatore

Manufacturers of Drilling Machine, Power hacksaw, Gear Hobbing Machine, Slotting etc.

# ப்ருந்தாவனமும் நந்தகுமாரனும் - 14

(தொடர்ச்சி)

விநோத்ஜிக்கு இப்பொழுது தனியாக இருந்து அலுத்து விட்டது. அவனுக்கு கல்யாணம் செய்துகொள்ள வேண்டும் என்று ஆசை வந்துவிட்டது. ராஜாபன்வாரிலாலின் 11 வயது பெண்ணிற்கு ராதா என்று பெயர். தனது பக்தர் ஒருவரை ப்ரேரணை செய்து ராஜாபன்வாரிலாலாவைத் தனது தரிசனத்துக்கு வரச் செய்தான். அந்த பக்தனும் ராஜாவிடம் சென்று, ''உங்களது எஸ்டேட்டைச் சேர்ந்த நவக்ராமத்திலுள்ள வனசராம்ஜி என்பவர் ஒரு ஸ்ரீ க்ருஷ்ணமூர்த்தியைக் கண்டெடுத்தார். அந்த மூர்த்தி மிகவும் சாந்நித்யம் வாய்ந்ததாகவும் லீலைகள் பல செய்யும் மூர்த்தியாகவும் விளங்குகிறது. நூற்றுக்கணக்கான பக்தர்கள் அவனைக் கண்டு அனுபவிக்கின்றனர். நீங்களும் வாருங்களேன்'' என்றார். உடனே ராஜாவும், ''அப்படியா! வனசராம்ஜி அந்த மூர்த்தியை எப்படிக் கண்டெடுத்தார்? அந்தக் கண்ணன் என்னென்ன லீலைகள் செய்தான்? விவரமாகக் கூறுங்கள்'' என்று ஆர்வமுடன் விசாரித்து அறிந்துகொண்டான். அவனுக்கும் விநோத்ஜியை ஸேவிக்க வேண்டும் என ஆர்வம் ஏற்பட்டு தன் மனைவி, மகள் ராதா ஆகியோருடன் தர்சனத்திற்குச் சென்றான்.

அங்கே தர்சனத்தின்போது ராதா பரவசமடைந்து அம்மாவை அழைத்து, ''அம்மா! அம்மா! டாகுர் என்னைப் பார்த்து சிரிக்கிறார் அம்மா'' எனக்கூவினாள். ''உளறாதே'' என்று அம்மா மகளை அன்புடன் தட்டிக்கொடுத்தாள். ராதா உடனே, ''அம்மா நிஜம்தான் சொல்கிறேன். டாகுர் என்னைப் பார்த்து கண் சிமிட்டிச் சிமிட்டிச் சிரிக்கிறான்'' என்றாள். அன்னையும் பிதாவும் குழந்தை ராதா ஏதோ உளறுகிறாள் என்று அலட்சியம் செய்துவிட்டு அவளை அழைத்துக் கொண்டு வீடு திரும்பினர். ஆனால், கண்ணனின் சிரிப்பும் சோபையும் ராதையின் மனதைவிட்டு நீங்கவே இல்லை. அவளுக்கு சதா விநோத்ஜியின் த்யானம் சித்தித்துவிட்டது. அவள் முரண்டு பிடித்ததால் ராஜாபன்வாரிலால் அவளை அடிக்கடி விநோத்ஜியின் கோவிலுக்கு அழைத்துச் சென்றார். மெல்ல மெல்ல அவருக்கும் விநோத்ஜியிடம் ஈடுபாடு ஏற்பட்டது.

ஒரு ஸமயம் ராதா, ''அப்பா! வினோத்ஜீயை நம் மாளிகைக்கு கூட்டிச் செல்லலாமாப்பா? அழகாக அலங்காரம் செய்து விதவிதமாக அவனுக்கு சேவை செய்ய வேண்டும் என்று எனக்கு மிகவும் ஆசையாக உள்ளது'' என்று கெஞ்சினாள். ராஜா, ''எனக்கும் ஆசைதான். ஆனால், வனசராம்ஜி விடுவாரா என்ன?'' என்று கூற வனசராம்ஜி, ''ஐயா! நான் உங்கள் சேவகன். வினோத்ஜிக்கும் ஸேவகன். நீங்கள் அவனை அழைத்துச் செல்லக்கூடாது என்று சொல்ல நான் யார்? உங்களுக்கும் அவனுக்குமுள்ள விஷயமிது. அவன் விருப்பப்பட்டால் அதற்குத் தடையேது!'' என்று பணிவுடன் கூறினார்.

அன்று இரவு வினோத்ஜி வனசராம்ஜியிடம், ''என்னை ராஜாவுடன் செல்ல அனுமதி அளித்துவிடு. உன் சேவையில் நான் அளவில்லா ஆனந்தம் அடைந்தேன். ஆனால், இப்போது ராஜாவின் சேவையையும் ஏற்பதற்கு ஆசைப்படுகிறேன். நீ வருந்தாதே. கூடிய சீக்கிரம் என்னைப் புரிந்துகொள்வாய்'' என்று கூறினான். பாவம் வனசராம்ஜி! என்ன செய்வான்! ராஜாவுக்கு சேதி தந்தான் கண்ணனை எடுத்துச் செல்வதற்கு. ராஜாவுக்கு ஒரே சந்தோஷம். அவனது மனைவியும் ராதாவும் ஆனந்தநடனம் ஆடினர். ஒரு நல்ல நாளில் வினோத்ஜி, வனசராம்ஜியின் எளிய கோவிலிலிருந்து பல்லக்கில் தடபுடலாக யானை, குதிரை, படைகளுடன் வாத்ய கோஷங்களுடன் ராஜபவனத்திற்கு வந்து சேர்ந்தான்.

ராதா, வினோத்ஜியை உள்ளன்புடன் நேசித்தாள். விதவிதமாகக் கொண்டாடினாள். பூஜாரி யாரும் கிடையாது. ராதாதான் வினோத்ஜி என்ன உடை உடுக்க வேண்டும்? என்ன உணவு உண்ண வேண்டும்? என்பதை தீர்மானிப்பாள். பலவிதமான நகைகள், புஷ்ப அலங்காரங்கள் செய்வாள். அத்தனையும் ஏற்று வினோத்ஜி மகிழ்ந்தான். ராதாவை விதவிதமாக சீண்டுவான். சாப்பிட்ட பிறகு தன் கைகளை அவளது உடையில் துடைப்பான். அவளைக் கிள்ளுவான். சிலசமயம், அவள்மீது துப்புவான். ராதாவுக்கும் நாட்கள் செல்லச்செல்ல வினோத்ஜியின் மீது பித்தேறியது. வினோத்ஜியும் அவளுடன் விதவிதமாக விளையாட ஆரம்பித்தான். ஒருநாள், ராதா பூமாலை சூட்டி அலங்காரம் செய்யும்போது, அவளது தாவணியின் தலைப்பை இழுத்து வினோத்ஜி'' நீ என்னை திருமணம் செய்து கொள்'' என்று சிரித்துக்கொண்டே கூறினான். ராதா இதைத் தன் தாயாரிடம் தெரிவித்தாள். அன்னை நம்பவில்லை.

- ஜயந்தி ஜானகிராமன்

# *ஸ்ரீ ஸ்வாமிஜியின் ஸம்பாஷணைகளிலிருந்து - 90*

தீரமிலகத்திற் தேடியுந்தனையான்
திரும்புவுற்றேனருள் அருணாசலா (தொடர்ச்சி)

ஜீவன்முக்தி ஸ்திதியை அடையாத ஒரு குருவை அண்டுவதில் ஒரு பிரயோஜனமும் (நன்மை) இல்லை. எங்கு சென்றாலும், எப்படி இருந்தாலும் (எந்த சூழ்நிலையில் இருந்தாலும்) ஞானத்தை உபதேசம் செய்பவர் மட்டுமே உண்மையான குரு ஆவார். குரு தன் அனுஷ்டானத்தில் வைத்துக்கொள்ளாமல் உபதேசம் செய்தால் அது பலிக்காது. அதாவது உதாரணத்திற்கு, ''நாமஸங்கீர்த்தனம் செய், ஜபம் செய்'' என்று சொல்பவர், தான் அதை செய்து வருபவராக இருத்தல் வேண்டும். ஆதலால், ஜீவன்முக்தி ஸ்திதியை அடைந்தவரே ஞானத்தை உபதேசம் செய்ய தகுதி உடையவர். அவரே உண்மை யான குருவும் ஆவார். ஒருவருக்கு எந்த குருவின் தரிசனத்தினால் மட்டுமே, மனதில் சாந்தி (அமைதி) உண்டாகிறதோ, அவரே அவருக்கு குரு ஆவார்.

ஜீவன்முக்தி ஸ்திதியை அடைந்த ஞானிகள் உலகில் காரியம் செய்தாலும், அவர்கள் எக்காரியமும் செய்யாதவர்களே! (அவர் களுக்கு மனது என்று ஒன்று இல்லை) கைவல்ய நவநீதம் எனும் கிரந்தத்தில் ஞானிகளைப் பற்றி சொல்லும்பொழுது, ''ஞானிகள் வியாபாரம் செய்யினும் செய்வர். அரசாட்சி செய்யினும் செய்வர்'' என்றெல்லாம் சொல்லி இருக்கிறது. உதாரணமாக, ஜனகர் என்ற ராஜா அரசாட்சி செய்து வந்த பொழுதிலும், ஞானியாகத் திகழ்ந்தார் என்று இருக்கிறது. ''ஞானிக்கு எந்த அடையாளமும் இல்லை'' என்றும் அந்த கிரந்தம் சொல்கிறது. ஒருவர் ''ஞானி'' என்று குறிப்பிட்டு சொல்லும்படியாக, ஞானிக்கு எந்த அடையாளமும் கிடையாது. சுருங்கச் சொல்லின், அப்படி புற அடையாளங்கள் (வெளியில்) ஏதும் இல்லாததே ஒரு அடையாளம்தான்.

அப்பேர்ப்பட்ட உயர்ந்த ஸ்திதியை அடைந்த பின்னும் ஞானிகள் ஏன் காரியம் செய்து வருகின்றனர். ஸ்ரீ காஞ்சி மஹாபெரியவர்கள் உத்தம நிலையை அடைந்திருந்தும், சற்றும்

தனது அனுஷ்டானங்களிலிருந்து வழுவாமல் இருந்தார்கள். அப்படிப்பட்ட ஞானிகளுக்கு காரியம் செய்வதினால், யாதொரு லாபமுமில்லை. காரியம் செய்யாமலிருந்தால், அவர்கள் அடைந்துள்ள நிலைக்கு நஷ்டமும் வராது. அவர்களுக்கு பாபமோ, புண்யமோ கிடையாது. பின் ஏன் செய்கின்றனர் எனும் கேள்வி நமக்கு எழுகிறது. சாதாரண மனிதர்களுக்கு தங்களுடைய கடமைகளில் நம்பிக்கை குறைந்து, தன்னிஷ்டப்படி வாழக்கூடாது என்பதனால், மஹாத்மாக்களான ஞானிகள் தங்களுக்கு யாதொரு லாபமில்லை எனினும், அவர்கள் சாதாரண மனிதர்களைப் போல் உலகக் கடமைகளை செய்கின்றனர். மஹாத்மாக்களின் செயல்களை உலகம் அப்படியே பின்பற்றும். குருவாக உள்ளவர்களும், தனது சிஷ்ய பரம்பரையினருக்கு ஓர் உதாரணமாய் தாங்களிருக்க ஆசைப்படுகின்றனர்.

(தொடரும்)

ஸ்ரீ ஹரி:

## மதுரமுரளி சந்தா

''மதுரமுரளி'' மாத இதழுக்கு புதியதாக சந்தாதாரராக விரும்புபவர்கள் தொடர்புகொள்ள வேண்டிய முகவரி :

''மதுரமுரளி'', ப்ரேமிகபவனம், New No. 2, Old No. 24, நேதாஜி நகர், ஜாபர்கான்பேட்டை, சென்னை - 83.

சந்தா விவரம் : ஆண்டு சந்தா ரூ. 60/-

ஆயுள் சந்தா ரூ. 1000/-

வெளிநாடு ஆண்டு சந்தா : ரூ. 300/-

மதுரமுரளி இதழுக்கான சந்தாவை, ''குருஜி ஸ்ரீ முரளீதர ஸ்வாமிகள் மிஷன்' என்ற பெயரில் மட்டுமே M.O. or DD. ஆக அனுப்பவேண்டும். தயவுசெய்து காசோலையாக அனுப்ப வேண்டாம். மணி ஆர்டரில் பணம் அனுப்பும்பொழுது, பெயர், முகவரி, மதுரமுரளி சந்தா எண் முதலியவற்றை "Space for Communication"ல் கட்டாயம் எழுத வேண்டும்.

மதுரமுரளிக்கான தங்களுடைய சந்தாவை புதுப்பிப்பவர்கள் (Renewal) தங்களுடைய முழு முகவரியுடன், தயவுசெய்து தங்களுடைய சந்தா எண்ணை குறிப்பிட்டு Subscription Renewal என்று எழுதி அனுப்பவும். சந்தாதாரரின் முகவரியில் மாறுதல் ஏற்படும்பொழுது உடனுக்குடன் அதை மிஷனுக்கு தெரிவிக்க வேண்டுகிறோம். Email address : contact@madhuramurali.org

# உழவார கைங்கர்யங்கள்

''திவ்யதேச திருக்கோயில்களை புனருத்தாரணம் செய்து ஸம்ப்ரோக்ஷணம் (குடமுழுக்கு) செய்வதுடன் திருக்கோயில்கள் திருப்பணி பூர்த்தியாவதில்லை; அந்த திருக்கோயில்களில் தினசரி பூஜை நடைபெற ஏற்பாடு செய்வது, உழவார பணி செய்வது, கோயில் வளாகத்தை தூய்மைபடுத்துவது, நந்தவனங்களை அமைத்து பராமரிப்பது முதலியவைதான் உண்மையான திருப்பணியாகும்'' என்று ஸ்ரீ ஸ்வாமிஜி அடிக்கடி வலியுறுத்தி சொல்வார்கள். ஸ்ரீ ஸ்வாமிஜியின் ஆக்ஞைபடி, சைதன்ய மஹாப்ரபு நாமபிக்ஷா கேந்திரா சார்பில் கீழ்கண்ட திருக்கோயில்களில் உழவாரப்பணி மேற்கொள்ளப்பட்டது.

நவம்பர் 2002 - திருஇந்தளூர் ஸ்ரீ பரிமளரங்கநாதர் திருக்கோயில்.

டிசம்பர் 2002 - திருச்சேரை ஸ்ரீ சாரநாதஸ்வாமி திருக்கோயில், திருநாங்கூர் ஸ்ரீ வண்புருஷோத்தமன் திருக்கோயில்

ஜனவரி 2003 - திருஅரிமேய விண்ணகரம், திருத்தெற்றியம்பலம், செம்பொன்செய் திருக்கோயில், திருக்காவளம்பாடி, திருமணிக்கூடம் திவ்யதேசங்கள்.

பிப்ரவரி 2003 - மயிலாடுதுறை அருகிலுள்ள தேரழுந்தூர்.

மேற்படி கோயில்களில் விமானங்களிலும், மதில்களிலும் இருக்கும் மரம், செடி கொடிகள் நீக்கப்பட்டன. கோயில் ப்ராகாரங்களிலும், மண்டபங்களிலும் ஒட்டடை அடிக்கப்பட்டன. நந்தவனங்கள் சீரமைக்கப்பட்டன. உழவாரப்பணி நடைபெறும் பொழுது நாமகீர்த்தனம் நடைபெற்றது.

பிப்ரவரி 1,2,3 தேதிகள்—திருநாங்கூர் பதினொரு கருடசேவை

திருமங்கை ஆழ்வாரால் மங்களாசாசனம் செய்யப்பட்ட திருநாங்கூர் திவ்யதேசங்களில் திருமங்கையாழ்வார் மங்களாசாசனம் உத்சவமும் பதினொரு கருடசேவையும் நடைபெற்றது. ஸ்ரீ ஸ்வாமிஜியின் ஆக்ஞைபடி திருநாங்கூர், சைதன்ய மஹாப்ரபு நாமபிக்ஷா கேந்திராவில் அகண்ட ''ஹரே ராம....'' நாமகீர்த்தனம் நடைபெற்றது. இதில் பெரும் அளவிலான பக்தர்கள் கலந்துகொண்டனர்.

# செய்திகள்

ஜனவரி 24-ந் தேதி—

''ஸந்த் ஏகநாதஸ்வாமி அன்னதானக் கூடம் திறப்பு விழா''

மதுரபுரி ஆஸ்ரம வளாகத்தில் ஸ்ரீ ஸ்ரீ ஸ்வாமிஜி முன்னிலையில் ''ஸந்த் ஏகநாதஸ்வாமி அன்னதானக்கூடம் திறப்புவிழா'', கணபதி ஹோமம், வாஸ்துசாந்தி ஹோமம் மற்றும் நவக்ரஹ ஹோமங்களுடன் நடைபெற்றது. இதில் ஸ்ரீ தீனதயாளன்-ஸ்ரீமதி விஜயகுமாரி தீனதயாளன் தம்பதியினர் கலந்துகொண்டார்கள்.

பிப்ரவரி 6-ந் தேதி—

அயோத்யா அச்வமேத மஹாமண்டப கும்பாபிஷேகம்

சென்னை, மேற்கு மாம்பலம், அயோத்யா அச்வமேத மஹா மண்டபத்தில் ஸ்ரீ ஸ்வாமிஜி முன்னிலையில் கும்பாபிஷேகம் நடைபெற்றது.

பிப்ரவரி 6-ந் தேதி—வார்ஷிக பிரதிஷ்டாதின மஹோத்ஸவம்

மஹாரண்யம் ஸ்ரீ கல்யாணஸ்ரீநிவாஸ பெருமாளின் வார்ஷிக பிரதிஷ்டாதின வைபவம் கொண்டாடப்பட்டது. ஸ்ரீ கல்யாண ஸ்ரீநிவாஸ பெருமாளுக்கு விசேஷ திருமஞ்சனம் நடைபெற்றது. ஸ்ரீ ஸ்வாமிஜி தீர்த்த பிரஸாதம் கொடுத்தார்கள். அகண்ட ''ஹரே ராம........'' நாமகீர்த்தனம் நடைபெற்றது. மாலையில் ஸந்த் ஏகநாதஸ்வாமி ஹாலில் திவ்யநாம பஜனையும், ஸ்ரீ ஸ்வாமிஜியின் உபன்யாசமும் நடைபெற்றது.

பிப்ரவரி 7-ந் தேதி முதல் 13-ந் தேதி வரை

சென்னை மேற்கு மாம்பலம் அயோத்யா அச்வமேத மஹாமண்டபத்தின் பொன்விழாவை ஒட்டி, ஸ்ரீ ஸ்வாமிஜி இரவு 7 மணி முதல் 9 மணி வரை ''பக்த சரித்ரங்கள்'' உபன்யாசம் செய்தார்கள்.

பிப்ரவரி 9-ந் தேதி

மஹாரண்யம் ஸ்ரீ கல்யாணஸ்ரீநிவாஸபெருமாள் திருக்கோயிலில் காலை 10 மணி முதல் மாலை 4 மணி வரை அகண்ட ''ஹரே ராம...'' கீர்த்தனம் நடைபெற்றது. இதில் ஆஸ்ரமம் அருகிலுள்ள பல கிராமங்களிலிருந்து பெருமளவில் பக்தர்கள் கலந்துகொண்டார்கள்.

பிப்ரவரி 15-ந் தேதி

சைதன்ய மஹாப்ரபு நாமபிக்ஷாகேந்த்ரா சார்பில் மஹாரண்யம் அருகிலுள்ள மணிமங்கலத்தில் வீதி பஜனை நடைபெற்றது.

# *பக்தர்களின் கவனத்திற்கு!*

நமது மதுரபுரி ஆஸ்ரம வளாகத்திற்குள் தியானகூடமோ, தெய்வ பிரதிஷ்டையோ, அதிஷ்டானமோ எதுவும் கிடையாது. ஸ்ரீ ஸ்ரீ ஸ்வாமிஜி, ஆஸ்ரமத்தில் தங்கியிருக்கும் காலங்களில், மாதுரிஸகி ஸமேத ஸ்ரீ ப்ரேமிகவரதனுக்கு பூஜையும் ஸத்ஸங்கமும் நடைபெறும். ஆஸ்ரம வளாகத்திற்குள் யஜுர், ஸாம வேதபாடசாலை நடந்து வருகின்றது. சுமார் அறுபது வித்யார்த்திகள் வேதம் பயின்று வருகிறார்கள். ஆஸ்ரமத்தில், கைங்கர்யம் செய்து வருபவர்களும் அவர்களுடன் தங்கியுள்ளார்கள். வேதம் பயிலும் மாணவர்களுக்கு இடையூறு ஏற்படக்கூடாது என்ற நல்லெண்ணத்தில் ஸ்ரீ ஸ்வாமிஜி ஆஸ்ரமத்தில் தங்கியிருக்கும்பொழுது மட்டுமே பக்தர்கள் காலை 9 மணி முதல் 11 மணி வரையிலும், மாலை 4 மணி முதல் 6 மணி வரையிலும் தரிசனத்திற்கு ஆஸ்ரமத்திற்குள் அனுமதிக்கப்படுவார்கள்.

ஆஸ்ரம வளாகத்திற்கு பக்கத்திலேயே ஸ்ரீ ஸ்வாமிஜியால் ஸ்ரீ கல்யாணஸ்ரீநிவாஸபெருமாள் ஆலயம் நிர்மாணிக்கப்பட்டு நித்ய ஆராதனைகள் நடந்து வருகின்றது. தினமும், காலை 6.30 மணி முதல் 11.30 மணி வரையிலும் மாலை 5 மணி முதல் 8 மணி வரையிலும் கோவில் திறந்திருக்கும். பக்தர்கள் இந்த நேரத்திற்குள் எப்பொழுதும் பெருமாளை ஸேவிக்கலாம்.

சென்னை K.K. நகரில் (ஜாபர்கான்பேட்டை) ப்ரேமிகபவனத்தில் ஸ்ரீ ஸ்வாமிஜி இருக்கும் சமயத்தில் அவரை காலை 8 மணி முதல் 10 மணி வரையிலும் மாலை 5.30 மணி முதல் 8.30 மணி வரையிலும் தரிசனம் செய்யலாம். ஸ்ரீ ஸ்வாமிஜியை தரிசனம் செய்யும்பொழுது அவரிடமிருந்து பகவந்நாம உபதேசம் பெற்றுக்கொள்ள விரும்புபவர்கள் பெற்றுக்கொள்ளலாம்.

ஒவ்வொரு மாதமும் மதுரமுரளி இதழில் ஸ்ரீ ஸ்வாமிஜி, அந்த மாதத்தில் எங்கு இருப்பார் என்ற விவரம் முன்கூட்டியே தெரிவிக்கப்பட்டுவிடும். இதைத்தவிர, மற்ற நேரங்களில் ஸ்ரீ ஸ்வாமிஜியை தரிசனம் செய்யவேண்டும் என்றால் முன் அனுமதி பெற்றுக்கொண்டு தரிசிக்கலாம்.

கடிதங்களை நமது நிர்வாக அலுவலகத்திற்கு "Personal Secretary To H.H. Sri Sri Muralidhara Swamiji" என்று அனுப்ப வேண்டும். கடிதங்கள் அனுப்ப வேண்டிய முகவரி கீழே தரப்பட்டு உள்ளது. ஸ்ரீ ஸ்வாமிஜியின் உதவியாளருக்கே கடிதங்களை அனுப்ப வேண்டும. அவர் ஸ்ரீ ஸ்வாமிஜியிடம் தெரிவிக்க வேண்டிய செய்திகளைத் தெரிவிப்பார். நமது மிஷனிற்கு E-mail address உள்ளது. ஸ்ரீ ஸ்வாமிஜிக்கு தனிப்பட்ட E-mail address கிடையாது.

கடிதங்கள் அனுப்ப வேண்டிய முகவரி :

"Personal Secretary to **H.H. Sri Sri Muralidhara Swamiji"**
**Guruji Sri Muralidhara Swamigal Mission**
Premika Bhavanam, New No.2, (Old No.24),
Netaji Nagar, Jafferkhanpet, Chennai - 600 083.
E-mail : contact@madhuramurali.org

ஸ்ரீ ஹரி:

## எமது வெளியீடுகள்

நூல்கள்

1. ஸ்ரீ ஸ்வாமிஜியின் பொன்மொழிகள்
2. சிந்தனையில் உதித்த பொன்மலர்கள்

**H.H. Sri Sri Muralidhara Swamiji's discourse series in Tamil : Cassettes, Audio CDs, VCDs**

| | |
|---|---|
| 1. ஸ்ரீ ஸ்வாமிஜியின் அமுத உரைகள் | Cassettes, VCDs |
| 2. திருப்பாவை | Cassettes, Audio CDs |
| 3. பகவான் ரமணரின் அக்ஷரமணமாலை | Cassettes, Audio CDs |
| 4. பகவான் ரமணரின் உபதேச உந்தியார் | Cassettes, Audio CDs |
| 5. Greatness of Bhagavan Ramana | Cassettes, Audio CD |

கீர்த்தனங்கள்

| | |
|---|---|
| 1. ஸ்ரீ ஸ்வாமிஜியின் கீர்த்தனங்கள் | Cassettes, Audio CDs |
| 2. மஹாமந்திரம்-அகண்ட கீர்த்தனம் | Cassete, Audio CD |

மிஷன் வெளியீடுகள் அனைத்தும் சென்னை பிரேமிகபவனத்தில் கிடைக்கும்.

# ஸனாதனப் புதிர் - பகுதி - 23

தொகுப்பு : **''ஆத்ரேயன்'',** சென்னை.

1. மஹாபாரதத்தின் மற்றொரு பெயர் என்ன? அந்தப் பெயர் எந்த பர்வாவில் காணப்படுகிறது?
2. க்ருஷ்ண த்வைபாயனர் மஹாபாரதத்தை எழுத எடுத்துக்கொண்ட காலஅளவு எவ்வளவு?
3. பாண்டவர்கள் தங்களது கடைசி யாத்திரையை மேற்கொண்ட பொழுது அர்ஜுனன் காண்டீபத்தை யார் சொல்படி எங்கே சமர்ப்பித்தார்?
4. தங்கள் கடைசி யாத்திரையை மேற்கொள்ளும் முன்பு பாண்டவர்கள் யார் யாருக்கு பட்டாபிஷேகம் செய்வித்தார்கள்?
5. கிருஷ்ண பரமாத்மா பரமபதம் ஏகியதை பாரதத்தில் எங்கே சொல்லப்பட்டு இருக்கிறது?
6. மஹாபாரதப் போருக்குப் பின்பு திருதராஷ்டிரர், காந்தாரி, குந்தி எத்தனை நாட்கள் உயிரோடு இருந்தனர்?
7. மஹாபாரதத்தின் நீதி என்ன? - இது பீஷ்மர் மூலம் எங்கே தெரிவிக்கப்பட்டிருக்கிறது?
8. அம்புப்படுக்கையில் எத்தனை நாட்கள் கடந்து விட்டது என்று பீஷ்மர் எங்கு தெரிவிக்கிறார்?
9. சிவ ஸஹஸ்ர நாமம் மஹாபாரதத்தில் எங்கு கூறப்பட்டுள்ளது - இதைக் கூறியவர் யார்?
10. உடலால் மூன்று, வாக்கால் நான்கு, மனதால் மூன்று ஆகிய பத்துவிதமான செயல் வழிகள் தவிர்க்கப்பட வேண்டும் என்று பீஷ்மர் கூறியது எவை?
11. பீஷ்மர் அம்புப்படுக்கையில் இருந்த ஆரம்பம் - முடிவு இந்த விசேஷ நாட்கள் எவை?
12. பீஷ்மர் வீழ்ச்சியில் இருந்து பீஷ்மர் நிர்யாணம் வரை நிகழ்ச்சிகளை அட்டவணைப்படுத்துக.

குறிப்பு : இந்த மாதம் 22-ம் தேதிக்குள் எங்களுக்கு வந்து சேரும் விடைகள் மட்டுமே ஏற்றுக்கொள்ளப்படும்.

## ஸனாதனப்புதிர் - பகுதி - 21க்கான - விடைகள்

உத்தரகாண்டம் - சர்க்கம் 27 - ஸ்லோகங்கள் 14, 20
பாலகாண்டம் - சர்க்கம் 15 - ஸ்லோகங்கள் 28, 29
பாலகாண்டம் - சர்க்கம் 16
அயோத்யா காண்டம் சர்க்கம் 1 - ஸ்லோகம் 7

இதில் பகவான் விஷ்ணு இராவணனை அழிக்க, மானிட உருவில் இராம அவதாரம் செய்வதாக பிரம்மா, ருத்ரன் மற்ற தேவர்களுக்கு வாக்குக்கொடுத்து, உறுதிசெய்து பிறகு தசரதர் - கோசலைக்கு மகனாகப் பிறக்கிறார். இராவண, கும்பகர்ணன் மற்ற அரக்கர்களை அழிக்க அவதாரம். இதில் முக்கியமாக இருவர் பெரும்பங்கு வகிக்கின்றனர். ஒருவர் மந்திரா எனப்படும் கூனி; மற்றொருவர் - சூர்ப்பணகா. இவர்கள் இல்லாவிடில் ராவணவதம், அர்க்கர்கள் அழிக்கப்படுவது ஏற்பட்டு இருக்காது. இதை மனதில் கொண்டு விடைகள் தரப்படுகின்றன.

1. முதல் சர்க்கம் - 48-வது ஸ்லோகம் . அவசரத்தில் அழைப்பு அனுப்பப்படவில்லை. பிறகு தெரிவித்துக்கொள்ளலாம் என்று தசரதர் கருதி கேகேயராஜனையும், ஜனகரையும் அழைக்கவில்லை என்று கூறுகிறார் வால்மீகி. ஆனால், கேகேய அரசன் வந்து இருந்தால் பரத சத்ருக்னர்கள் அவருடன் வந்திருப்பார்கள். மேலும், ஜனகருக்கு அழைப்பு அனுப்பப்பட்டு இருந்தால், ராமருக்கு யுவராஜ்ய பட்டாபிஷேகம் செய்விக்கப்பட்டு, இராமர் காட்டுக்குச் சென்றிருக்க மாட்டார். ராவணவதம் நடந்து இருக்காது.

2. அயோத்யா காண்டம் - 4-வது சர்க்கம் - ஸ்லோகங்கள் 24 / 25 / 26 - எப்பொழுது பரதன் அயோத்தியில் இல்லாதபொழுது யுவராஜ்ய பட்டாபிஷேகம் நடக்க வேண்டும் என்று தசரதர் ராமரிடம் சொன்னாரோ அப்பொழுதே அஸ்வபதிக்கு கொடுத்த வாக்குறுதியைப் பற்றி தெரிவித்து இருக்க வேண்டும். இதனால் சர்க்கம் 107 - ஸ்லோகம் மூன்றில் இராமர் இதைக் கூறுகிறார்.

3. தந்தையின் கட்டளையை சிரமேற்கொண்டார். பித்ருவாக்ய பரிபாலனம். தந்தை சொல்மிக்க மந்திரமில்லை.

4. கைகேயிக்குத் தெரியாது. அஸ்வபதி, தசரதர் மற்றும் முற்றும் உணர்ந்த வசிஷ்டர் முனிவர்களுக்குத் தெரியும்.

5. கைகேயியை கல்யாணம் செய்து கொண்டபிறகும் குழந்தை பிறக்கவில்லை. ரிச்யசிருங்கர் நடத்திக்கொடுத்த புத்ரகாமேஷ்டி யாகத்தின்

மூலம் பிறந்த நான்கு குழந்தைகளில் ஒருவர்தான் பரதன். ஆகவே, அஸ்வபதிக்குக் கொடுத்த வாக்குறுதி, கைகேயிக்கு திருமணம் செய்து கொண்ட உடனே குழந்தை பிறக்காததால் அர்த்தமற்றது.

6. பரதன் அயோத்தியில் இருந்தால், ராமர் காட்டுக்குச் சென்று இருக்க முடியாது. மேலும் கேகேய மன்னர் முதலானவர்களும் இருந்திருப்பார்கள். அஸ்வபதி யுதாஜித், கைகேயி, பரதன் இவர்கள் இருந்தால் ராமர் காட்டுக்குச் சென்றிருக்க இயலாது. அவதாரத்தின் அர்த்தம் நிறைவேறாமல் போயிருக்கும்.

7. தந்தை சொல் மிக்க மந்திரமில்லை. ராவணனை அழிக்க வேண்டும். பரதன் இருந்திருந்தால் ராமன் நிச்சயமாக அரியணையில் அமர்ந்து இருக்க வேண்டும். அவதார காரியம் நிறைவேறி இருக்காது.

8. தசரதர் - கைகேயிக்குத் திருமணம் ஆன பிறகும் கூட குழந்தை ஒன்றும் பிறக்கவில்லை. ஆகவே, அந்த வாக்குறுதி கைகேயிக்குக் குழந்தை இல்லாததால் அர்த்தமற்றது.

9. கைகேயிக்கு கொடுத்த இரண்டு வரங்கள் - அயோத்யா காண்டம் - 11-வது ஸர்க்கம் - ஸ்லோகங்கள் 19, 20, 21 பித்ரு வாக்ய பரிபாலனம் - தந்தை சொல்படி நடத்தல் - தந்தை பேரரசர். ஆகவே, அவரது செய்கைகளைப் பற்றி ராமர் ஒன்றும் கேட்கவில்லை. அரசர் ஆணை; தந்தை கட்டளை - எல்லாவற்றிலும் மேலாக இராவண வதம் - ஆகவே ராமர் ஒன்றும் சொல்லவில்லை. கைகேயியின் கட்டளையை சிரமேற்கொண்டு, தந்தைக்கும் நல்ல பெயர் வாங்கிக்கொடுத்து கானகம் சென்றுவிட்டார்.

10. தெரியும். ஆனால், இராம அவதாரத்தின் குறிக்கோளும் அவர்களுக்குத் தெரியும்.

11. கைகேயியை திருமணம் செய்து கொண்டபிறகும் குழந்தை ஒன்றும் பிறக்கவில்லை - மூன்று மனைவிமார்களுக்கும் குழந்தை பிறக்காததால் புத்ரகாமேஷ்டி செய்து பிறகு நான்கு குழந்தைகள் பிறந்தன. அதில் கோசலை மைந்தன் மூத்தவன். ஆகவே ராமருக்கு யுவராஜபட்டாபிஷேகம் என்பது சரிதான்.

12. கைகேயியை கல்யாணம் செய்து கொண்டபொழுது அஸ்வபதிக்கு தரப்பட்ட வாக்குறுதி. குழந்தை பிறக்காததால் அந்த வாக்குறுதி அர்த்தமில்லாமல் போய்விட்டது. ஆகவே அரசவையில் அதைப்பற்றி தெரிவிக்கவில்லை.

13. இராமர் தந்தை சொல்லை மந்திரமாக மதித்தார். அரசனது கட்டளையை சிரமேற்கொண்டார். மேலும் அவரது அவதார காரியம் நடக்க வேண்டும். ஆகவே அவர் ஒன்றும் கேட்கவில்லை.

## ஸனாதனப்புதிர் - பகுதி - 22க்கான - விடைகள்

1. ஒன்று; 18-ம் அத்தியாயம், ஸ்லோகம் - 61
2. ஸுத்யும்னன்; இலா; வைவஸ்வத மனு; ச்ரத்தா தேவி , 3. யுவனாச்வன்
4. 4 யுகங்கள் = 1 மஹாயுகம், 71 மஹாயுகங்கள் + 1 சந்த்யா = மன்வந்தரம், 14 மன்வந்தரம் + 1 சந்த்யா = கல்பம், 2 கல்பம் = 1 நாள், 360 நாள் = 1 வருடம், 100 வருடம் = பிரம்மாவின் வயது, 311,040,000,000,000
5. 103 ஸ்லோகங்கள்
6. அயோத்யா காண்டம் 7 (1), ஆரண்ய காண்டம் 17 (5), அயோத்யா காண்டத்தில் மந்தரா - இதனால் இராமர் காட்டுக்குச் செல்கிறார்.

   ஆரண்ய காண்டம்-சூர்பணகா-இதனால் சீதை அபகரிக்கப்பட்டு மற்ற அரக்கர்கள் கொல்லப்படுகின்றனர். இவர்கள் தான் இராமயணத்தின் சூத்ரதாரிகள். மேலும் ''யத்ருச்சயா'' என்ற பதம் பாலகாண்டம் 68.9-ல் காணப்படுகிறது. வீர்ய சுல்கத்தால் ராமர் சீதையை அடைந்தார். (சீதையை அபகரித்ததால்தான் இராவணன் கொல்லப்படுகிறான்.)
7. காதுகள், மூக்கு, ஸ்தனங்கள் இவைகளை அறுத்து எறிந்து.
8. ஸ்ரீமத் பகவத்கீதை, 9. சூரியபகவான்; கலிங்க தேசத்தில் உள்ள கோனார்க், 10. வாரணாசி; மதுராவில் உள்ள கேசவதேவர் கோவில், 11. கோலாபூர்-மஹாராஷ்ட்ரா, 12. அஹல்யாபாய்-ஹோல்கர்

## ஸனாதனப் புதிர் - பகுதி - 22க்கான சரியான பதில்களை அனுப்பி பரிசு பெற்றவர்கள் விவரம்

முதல் பரிசு ரூ. 250/-

Sri. S. Saranathan, 21, Ranganathan Street, Nehru Nagar, Chrompet, Chennai - 44.

இரண்டாம் பரிசு ரூ. 150/-

Sri. C. Krishnaswami, 23 (New No. 32), Jambulingam Street, Chennai - 34.

மூன்றாம் பரிசு ரூ. 100/- (இருவருக்கு தலா ரூ. 50/-)

Sri. K.S. Subramanyan, 16/4, Dr. Ranga Road, Mylapore, Chennai - 4.

Sri. S. Janakiraman, B.N. 14, Balaram Nagar, Safilguda, Hyderabad - 47.